பக்கங்கள்: பன்னிரண்டு

...tered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 13 | ஞாயிற்றுக்கிழமை | (25-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 128

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை

☞ வங்கிக்கணக்கு அவசியமில்லை

☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்

☞ 365 நாள் சேவை

☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 222 7310
021 222 7555
021 222 7560
Fax 021 222 7310

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

E-mail: thirumurugan@eudoramail.com

# ஜனாதிபதியின் அழைப்பு

# ஐ.தே.கட்சி வரவேற்பு!

(நமது நிருபர்)

**இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு நோர்வே அரசை அனுசரணையாளராகச் செயற்படுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கோரியிருப்பதை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.**

மீண்டும் ஒரு யுத்தம் என்ற பேச்சுக்கு இடமில்லாதவாறு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் அளித்த ஆணையைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் வகையில் அவர் நோர்வே அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தச் சமாதான முயற்சியை ஐக்கியதேசியக் கட்சி வரவேற்று வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இனப்பிரச்சினைக்குரிய சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வத

(12ஆம் பக்கம் பார்க்க)

## "கருமய" என வர்ணிக்கப்பட்ட ஹெல உறுமய எம்.பிக்கள்

(கொழும்பு)

சபாநாயகர் தெரிவில் ஆத்திரமுற்ற ஐ.ம.சு.மு.தலைவர்கள் ஹெல உறுமயவினரை ஜாதிக ஹெல கருமய என வர்ணித்துள்ளனர்.

ஹெல உறுமயவைச் சேர்ந்த இரு எம்.பிக்கள் ஐ.தே.க. அபேட்சகரான லொக்கு பண்டாரவிற்கு வெளிப்படையாகவே வாக்களித்ததை தொடர்ந்து நடாத்திய தமது ஊடகவியலாளர் மாநாட்டில் மைத்திரிபால சிறிசேன, விமல் வீரவன்ச, சுசில் பிரேம்ஜயந்த ஆகியோர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்கிரிய பீடமகாநாயக்கருடன் சபாநாயகர், ரணில் நேற்றுப் பேச்சு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும், சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்கு பண்டாராவும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரான சங்கைக்குரிய உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரரை நேற்று சந்தித்து ஆசிபெற்றுள்ளனர்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்றுவழிபட்ட பின்னர் அஸ்கிரிய பீட மகாநாயக்கரை [illegible] சபாநாயகரும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அங்கு மகாநாயக்கதேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றில் அரசாங்க நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற வேண்டுமென்பதே நாட்டு மக்களின் விருப்பமாகும். சபாநாயகர் தெரிவின் போது பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சைத் தொடர்வது குறித்து

# விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு

# நோர்வேக்குத் தெரிவிக்கப்படும்

(நமது நிருபர்)

**இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே அரசை ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியதையடுத்து நோர்வே அரசு எம்முடன் உத்தியோகபூர்வமாகத் தொடர்புகொண்டால் எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

கடந்த வருடம் நவம்பர் மாதம் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையிலான அதிகாரப் போட்டி காரணமாக பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந் நிலையில், பொதுத் தேர்தல் ஒன்றின்மூலம் ஆட்சிக்குவரும் எந்த அரசுடனும் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்று அரசு அமைத்தபின், சபாநாயகர் தெரிவில் தோற்றுப்போன நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மத்தியஸ்தம் வகிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேப் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டதை அடுத்து, இலங்கை அரசின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்போவதாக நோர்வே

(12ஆம் பக்கம் பார்க்க)

## கணனி நிலையத்தில் குண்டுவெடிப்பு யாழ். சிவன்பண்ணை வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியிலுள்ள கணனி நிலையம் ஒன்றில் நேற்றுமாலை பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

கணனி நிலையத்தினுள் எவரும் இல்லாததால் ஏற்படவிருந்த பெரும் உயிரிழப்புத் தவிர்க்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6.15 மணியளவில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

கணனி மற்றும் தட்டெழுத்துப் பயிற்றுவிக்கும் மேற்படி நிலையத்திற்கு அருகிலிருந்த பாழடைந்த வீடு ஒன்றில் மேற்படி குண்டு இருந்திருக்கலாம் என்றும் அக்குண்டு திடீரென்று வெடித்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. குண்டு வெடித்ததை தொடர்ந்து பெரும் புகைமண்டலம் கிளம்பியது.

குண்டு வெடிப்பினால் சுவரில் பெரிய துவாரம் ஏற்பட்டுள்ளதுடன் வீட்டின் கூரை ஓடுகளும் சேதமடைந்துள்ளன.

குண்டு வெடித்ததைத் தொடர்ந்து பெருமளவிலான பொதுமக்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## அரசாங்கம் மன்னிப்புக் கோராவிடில் நிபந்தனையுடனான ஆதரவு விலக்கப்படும்

### ஹெல உறுமய எச்சரிக்கை

ஐ.ம.சு. முன்னணி பாராளுமன்றில் நடந்து கொண்ட விதத்தினை ஹெல உறுமயவினர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். தமது பிக்குகள் இருவரைக் கடத்தியதற்காக அரசாங்கம் பகிரங்க மன்னிப்புக் கோராவிடில் தற்போது அரசுக்கு வழங்கிவரும் நிபந்தனையுடனான ஆதரவை விலக்கிவிடப்போவதாகவும் ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

ஹெல உறுமயவின் பேச்சாளர் அத்துரலியே ரத்னதேரர் தெரிவிக்கையில், எமது இரு பிக்கு எம்.பி.களை மறைத்து வைப்பதற்கு தாமே பொறுப்பு என் பாராளுமன்றில் ஐ.ம.மு. பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இல்லாவிடில் நிபந்தனையுடனான ஆதரவு விலக்கப்படும். இதுபற்றி நாம் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அரசும், ஜனாதிபதியும் கூட மறுத்து விட்டார். ஜனாதிபதியின் நெருக்கமான ஒருவர் எமது [illegible] பாதுகாப் பாக அழைத்து [illegible] சான்றுகள் எம்மிடம் உள்ளன. பஞ்ஞானந்த தேரர் 19-4308 என்னும் இலக்க வாகனத்திலும், அபரேக தேரர் 56-5199 என்னும் இலக்க வாகனத்திலும் கூட்டணி எம்.பிக்களின் வாகனத்தில் பாராளுமன்றிற்குள் அழைத்துவரப் பட்டுள்ளனர்.

மேற்படி இரு பிக்குகளும் கட்சி முடிவுகளுக்கு முரணாக சபாநாயகர் தேர்தலில் வாக்களிக்க உரிமையற்றவர்கள். இதற்காக நாம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளோம். முதலில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவே தீர்மானித்திருந்தோம். ஆனால் அவர்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஜே.வி.பியினர் இன்று சந்திப்பு

(நமது நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இன்று ஜே.வி.பி. தலைவர்களுடன் முக்கிய சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சிறுபான்மைப் பலத்துடன் ஆட்சியை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜே.வி.பி. சார்பு அமைச்சர்கள் தங்களது பொறுப்புக்களை இதுவரை ஏற்காது இழுபறி நிலையிலும் சபாநாயகர் தெரிவில் எதிரணிக் கட்சிகளிடம் தோற்றுப் போன நிலையிலும் ஜே.வி.பி. தலைவர்களுடனான இன்றைய சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

ஜனாதிபதி-ஜே.வி.பியின் இன்றைய சந்திப்பின்போது அமைச்சுப் பொறுப்புக்களின் ஒதுக்கீட்டுப் பிரச்சினை ஓரளவுக்கு முடிவுக்கு வரும் என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமைச்சுப் பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுப் பிரச்சினை முடிவுக்கு வரும் பட்சத்தில் சமாதான முயற்சிகளில் ஈடுபடவுள்ள ஜனாதிபதிக்கு ஜே.வி.பியினர் எந்த அளவுக்கு உதவி செய்வார்கள் என்ற விவகாரமும் இன்றைய சந்திப்பில் பிரதிபலிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# ஆன்றவிந்த சான்றோன் ஆயர் தியோகுப்பிள்ளை

**மறைந்த ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஓராண்டு நினைவு தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே. இந்த வரிசையில் ஈழமணித்திரு நாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களில் இந்த மண் எம் சொந்த மண் என தன்னுயிரைத் துச்சமென மதித்து தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பிய பெருமகனார், அமரர் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை என்பது சாலவும் பொருந்தும்.

ஞான அறிவை, ஆளுமையை, இன்பத்தமிழுக்கு இதயத்தை ஈர்ந்து, எழுத்தாற்றலை, சிந்தனைச் சிறப்பை, விளையாட்டு வீரத்தை, திருச்சட்ட நிபுணத்துவத்தை எல்லாம் ஒருங்கிணைந்த ஞானியாக யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை விளங்கினார்.

மறைந்தும் மறையாதவராய், புகழ்பூத்த செம்மலராக திகழுவதற்கு இவரின் திருப்பீடாட்சிப் பணி, யாழ்.கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் சிறந்த அதிபராக ஆற்றிய மாபெரும்பணி, வடமாநிலத்தில் கல்வி மேம்பாட்டிற்கு செய்த தியாகப் பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி என்பன வெள்ளிடை மலையாகும்.

### மங்காத மாணிக்கம்

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"** என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்குக்கு இலக்கணமாகத் தியோகுப்பிள்ளை ஆண்டகை திகழ்ந்தார். இவரின் பிறப்பினால் குடும்பத்தினர் மகிமையுற்றனர். இவரை உருவாக்கிய கல்வி அன்னை - யாழ். புனித பத்திரிசியார் அன்னை ஒப்பில்லா உவகையடைகிறாள். ஈழத் திருச்சபையின் இரண்டாவது தமிழ் ஆயராக விருந்து மங்காத மாணிக்கமாகத் திகழ்ந்ததையிட்டுப் பூரிப்படைகிறாள். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தமிழறிஞரை நினைவு கூர்வுதால் தமிழ்த்தாய் புளகாங்கிதமடைகிறாள். அனைத்துக்கும் இவர் இறை பணிக்கும், தமிழ்ப் பணிக்கும் ஆற்றிய மாபெரும் சேவையே இவரின் பூதவுடல் அழிந்தாலும் இவரின் புகழ் உடம்பு அழியாமல் சகல நன்மக்கள் உள்ளங்களில் இடம் பிடித்துள்ளது.

தமிழறிஞர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தனி வாழ்வை ஆராய்ந்தால் அத்னைப் பெரும் காவியமாக, உன்னத ஓவியமாக, ஏன் பேரிலக்கியமாகவும் சமைக்கலாம். இவர் கருவிலே திருவுடையராகப் பிறந்ததினால் தன் உடல் பொருள், ஆவி அனைத்தையும் இறைபணிக்கே இறுதி மூச்சு வரை அர்ப்பணித்து ஈழத்திருச்சபையின் வரலாற்றிலே, தனக்கெனவொரு முத்திரை பதித்துள்ளார். இவர் அரசியல், சமய, சமூக பொருளாதார நிலையில் கல்வி யாழ். மக்களின் தனிப்பெருஞ் சொத்தாகத்திகழ ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய மாவீரனான இவர், ஈழமணித் திருநாட்டின் கல்விப் பாரம்பரியத்தில் அணைந்தும் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டேயிருக்கிறார். இவர் யாழ்.கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் சிறந்த அதிபராக 1956 - 1960 வரை இருந்து, ஆன்மீக வழிகாட்டல் ஊடாக பல நூற்றுக் கணக்கான ஆசிரிய தீபங்களை உருவாக்கினார். இத்தீபங்கள் ஆயிரமாயிரம் தீபங்களாகச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டே தொடருகின்றன. இவர் தோற்றத்திலே இமயமலை, தொண்டிலே மொழுகவர்ச்சி. அழகிலே [illegible] கணனி. அன்பிலும் பண்பிலும் வழிநடத்தலிலும் குன்றிலிட்ட அணையாத தீபமாக திகழுகிறார். ஆளுமைக்கு வரைவிலக்கணம் கூறமுடியாது. ஆனால் பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டே ஆளுமையின் ஒட்டுமொத்தமே அமரர் மேதகு கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை என்றால் அது மிகையாகாது.



### ஆர்வமிகு ஆயர்

இந்த நாட்டில் தமிழர் இரண்டாந்தரப் பிரசைகளல்ல. எம் மொழி தமிழ் மொழி, அது தொன்மை மிக்கது. இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற ஆர்வமிக்க ஆயராகவே இறுதிவரை வாழ்ந்தார். உரிமைக்குரல் எழுப்புவோம் உறவுக்குக் கரம் கொடுப்போம் என்றவாறு ஈழமணித்திரு நாட்டிலே உண்மை, நீதி, சமாதானம் மலர சொல்லுக்கு செயலுருவம் வடித்த பெருமகனார் என்றால் அவர் தியோகுப்பிள்ளை ஆண்டகையே.

கடல் பெருக்கெடுத்தாலென்ன? மலை பெயர்ந்து வந்தாலென்ன? நான் நிலைதளர மாட்டேன் என்ற நெப்போலியனின் மன உறுதியுடன் யாழ் .மக்களின் புலம் பெயர்வு காலங்களில் தன்னை நாடிவந்த மக்களைப் பாதுகாக்க உயிரைத் துச்சமென மதித்து தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ். ஆயர் இல்லத்தை விட்டு ஒரு அங்குலம் கூட அசையாமல் இரும்பு மனிதனாக புலம் பெயராமல் மக்களோடு மக்களாக வாழ்ந்த இருள் சூழ்ந்த நாட்களை நாம் எப்படி மறப்போம்?

இவர் எமது அன்னை மொழியில் அதீதப்பற்றுடையவர். இதற்கு இவரின் தாய் ஊட்டிய ஊன் பாலிலும் ஞானப்பாலே முதன்மையானதாகும். ஈழநாட்டின் பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் பற்றுறுதி மிக்கவர் தியோகுப்பிள்ளை ஆண்டகை. நாட்டு பாடல்களும், நாட்டுக் கூத்துக்களும், ஏற்றம் பெற வேண்டுமென்பதற்காய் கலையார்வம் மிக்கவர்களுக்குக் காவலனாய்த் திகழ்ந்தவர். இவரின் கலையார்வத்தின் உரைக்கல்லே திருமறைக் கலாமன்றமாகும்.

தமிழ்நாட்டிலே தமிழ் ஏட்டுச் சுவடிகள் அழிந்து போகும் பேராபத்திலிருந்து பலநூல்களை அச்சுவாகனம் ஏற்றிய பெருமைக்கும் மகிமைக்கும் உரிய தமிழ் வளர்த்த தங்கத்தாத்தா. உ.வே. சாமிநாதர் ஐயரைப் போன்று ஈழ நாட்டிலே தமிழின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் பெரும் பணியாற்றினார் தமிழறிஞர் ஆயர் தியோகுப்பிள்ளை எனில் சாலவும் பொருந்தும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்றாற் போல் இவ்வேளையில் 1988 இல் யாழ் சுண்டுக் குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு சிறப்பு மலர் வெளிவந்தது. அத்துடன் இஸ்நாபக சஞ்சுவாம் அம்மானை திருத்திய மூன்றாம் பதிப்பாக யாழ்.ஆயர் தியோகுப பிள்ளை ஆண்டகையின் அரும் பணியினால் வெளிவந்தது.

அவ்வெளியீட்டில் அடியேனின் சிற்றுரையையும் இடம்பெற வழிவகுத்தமைக்கு நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றேன். படித்தல், படிப்பித்தல், பதிப்பித்தல் என்பன அவருக்கு கைகண்ட கலையாகும். அவை யாவும் ஏட்டில் அடங்கா. அம்மானை என்று அவர் காதில் பட்டுவிட்டால் அவர் முகத்தில் வெளிப்பட்டு நிற்கும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கலை இன்பமே நிலையான இன்பம் என்பதை ஆயர் உய்த்துணர்ந்து தானும் சுவைத்து ஏனையோரும் இன்புற்று வாழ வழிசமைத்தார்.

### மாமனிதனின் தீரச்செயல்கள்

மலையளவு பணிபுரிந்த மாமனிதன் தியோகுவின் கடுகளவு தீரச்செயல்கள் 1970இல் யாழ். அரியாலை கிழக்கில் அன்னை வேளாங்கண்ணி ஆலயம், 1971இல் அரியாலை மேற்கில் யூதா ஆலயம். 1977இல் நான் விரிவுரையாளராகக் கடைமையாற்றும் காலத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையில் உயிர்த்த அரசர் ஆலயம் கட்டப்பட்டவை இம்மூன்று புதிய ஆலயங்களின் உருவாக்கத்திற்கு ஆயரின் பங்களிப்பு பெரியது.

இவை இருதசாப்தங்களில் நம்நாட்டில் ஏற்பட்ட கொடூர போரினால் பூரணமாக அழிந்தன; ஆனால் யாழ். அரியாலை யூதா ஆலயம் புனரமைக்கப்பட்டு தனிப்பங்காக திகழ்கின்றது. பொது நிலையினரின் பங்களிப்பு அளப்பரியன, 1982இல் யாழ். கொக்குவில் கிழக்கில் சின்னப்பராலயம் புனரமைக்கப்பட்டு வைரவிழா மலரும் வெளியிடப்பட்டது. இதற்கும் வழிசமைத்தவர் இவரே.

1977இல் தென்கிழக்காசியாவிலே முதல் ஆரம்பிக்கப்பட்ட யாழ். கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை மூடப்பட்டது. ஆயர் தியோகுப்பிள்ளையின் மதிநுட்பத்தினால் திருச்சபைக்குரிய அவ்வளாகத்தை அரசிடமிருந்து மீளப்பெற்று பல சவால்கள் மத்தியில் தன் நிறைவான புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை நிறுவி அதை சீரும் சிறப்புமாக நிர்வகிக்க வழிசமைத்த பெருமை இவரையே சாரும்.

1980இல் யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்சங்க எழுச்சி மாநாட்டுச் சிறப்புமலர் வெளியீடும் நடைபெற்றது. இதற்கு ஆயரே மூலவேராகும்.

1981இல் மன்னார் புதிய மறைமாவட்டமாக மலர யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையே மூல காரண கர்த்தாவாகவும் திகழ்ந்தார்.

1987இல் பலாலி ஆசிரிய கலாசாலையில் கத்தோலிக்க பீடம் உருவாக்கம் பெற பல சவால்கள் மத்தியில் கல்வி அமைச்சுடன் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்பு கொண்டு வெற்றியும் ஈட்டினார். என்னை அதன் தலைவராக நியமித்ததையிட்டு இவ்வேளை ஆயரை நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றேன்.

யாழ். பல்கலைகழகத்தில் கிறிஸ்தவ, இஸ்லாமிய பீடம் ஆயரின் கடின முயற்சியின் விளைவே உருவாக்கம் பெற்றது. அதன் முதலாவது பீடத்தலைவராக பேராசிரியர் ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகள் நியமனம் பெற்றார்.

1999இல் பெரும் பணியாற்றிய பெருமகனார் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு யாழ். பல்கலைகழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவித்தது. 2001இல் இவர் குருத்துவ வைர விழாவையும் கண்டுகளிக்க இறைவன் வழி சமைத்தார்.

இவரின் காலப்பகுதியில் யாம் பெற்ற இன்பம் பெறு இவ்வையகம். என்ற உயர்ந்த சிந்தனையில் யாழ். மறைமாவட்ட குருக்கள் பலர் உயர் பட்டங்களைப் பெற வழிசமைத்தார். பல துறவற சபைகளின் விரிவாக்கம் இவருடைய காலத்திலே நடைபெற்றன.

ஆன்றவிந்த சான்றோனாகிய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் மறைவு முழுத்திருச்சபைக்கும் சிறப்பாக ஈழம் வாழும் தமிழ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவரின் மாபெரும் பணிகளுக்கு இறைவனுக்கு நன்றி நவிலுவதோடு இவரின் ஆன்மா நிலையான வாழ்வில் நிலைபெற காலமெல்லாம் இறைவனை இறைஞ்சுவோமாக. ★

**துரை. ஆரோக்கியதாசன்**
*B.A.Dip-in-Edu (முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை*

---

## 456 மாணவர்கள் பல் நோயினால் பாதிப்பு

(சுதுமலை)

மானிப்பாய் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 17பாடசாலைகளில் மருந்துவ பரிசோதனை செய்தபோது, சுமார் 456 மாணவர்கள் பல்,முரசு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக புள்ளி விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தரம்1. மாணவர்களில் அதிகளவு பற்சூத்தை இனம் காணப்பட்டுள்ளது.இதுதொடர்பில் மாணவர்கள் பற்களைப் பாதுகாக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பாடசாலைகள் ரீதியாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-252)

## மாதாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்ற ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00மணிக்கு நீர்வேலி கந்தசுாமி ஆலய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ-18)

## 10 மில்லியன் நிதியில் கடல் உணவுச் சந்தை

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் நவீன ஏற்றுமதி வசதிகள்கொண்ட சர்வதேச தரத்திலான கடல்லுணவுச் சந்தை ஒன்றை நிறுவுவதற்கென உலக உணவு ஸ்தாபனம் 10மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ்.மாவட்ட மீனவர்கள் ;தாம் பிடிக்கும் கடலுணவுகளைச் சந்தைப் படுத்தி உரிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் முதலாளிமாரின் பிடியிலிருந்து மீனவர்களை காப்பாற்றுவதற்கு உரியநடவடிக்கை எடுக்குமாறும் யாழ்.மாவட்ட கடற் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் பல நிதி நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்கமைவாகச் சிறந்த சந்தைபடுத்தல் வசதிகளைக் கொண்ட கடலுணவுச் சந்தை ஒன்றை நிறுவுவதற்கு முதற்கட்ட நிதியாக 10 மில்லியன் ரூபா உலக உணவு ஸ்தாபனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இதனைப்பயன்படுத்தி சந்தை ஒன்றை நிறுவுவதற்கான இடத்தினை தெரிவுசெய்யும் முயற்சியில் தற்போது யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கச் சம்மேளனம் தீவிரமாக ஈடு [illegible] (உ-35)

## பஜீரோ அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தாய் சேய் நலனை மேம்படுத்தும் நோக்கில் கடமை புரியும் மாவட்ட தாய்சேய் நல வைத்திய அதிகாரிக்கு யுனிசெவ் நிறுவனம் பஜீரோ வாகனம் மூன்றை இந்தமாதம் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி.சிவபாதம் ஊடாக வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக நிரந்தரமாக தாய் சேய் நல வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை என்பதும் இந்த மாதம் முதல் டாக்டர் எஸ். தெய்வேந்திரன் இந்தப்பதவிக்கு நியமிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-252)

முண்டு கொடுக்கும் சக்திகள் முரண்டு பிடிக்கும் நிலையில்

# ஜனாதிபதி சந்திரிகா முன்னெடுக்கும் சமாதானப் பேச்சு சாத்தியப்படுமா?

## அரசியல் ஆய்வாளர்களின் அண்மைய சந்தேகம் இது

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் வகையில் நோர்வேத் தரப்பினர் ஊடாக பச்சைக்கொடி காட்டியிருக்கின்ற போதும் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்துவதென்பது குறித்தும் அந்தப் பேச்சுவார்த்தை எந்தளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது குறித்தும் கடந்தகால நடவடிக்கைகளின் அடிப்படையில் அரசியல் ஆய்வாளர்கள் தரப்பில் பலத்த சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.**

இலங்கையின் சமாதான முயற்சியில் அனுசரணை வழங்கிவந்த நோர்வே அரசை, மீளவும் சமாதான முயற்சிக்கு அனுசரணை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

### நோர்வே 'ஓக்கே'

சந்திரிகாவின் இவ் அழைப்புக்கு நோர்வேப் பிரதமர் சாதகமாகப் பதிலளித்துள்ளதுடன், தமது பங்குபற்றலை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளுகின்ற பட்சத்தில், ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானத் தீர்வு ஏற்பட, நோர்வே மத்தியஸ்தம் செய்ய முயற்சிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில், இரு பிரதான சிங்களக் கட்சிகளான அப்போதைய ஆளும்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியால் தோன்றிய அரசியல் நெருக்கடிகளையடுத்து, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நோர்வே அரசு தனது சமாதான அனுசரணை முயற்சியில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

### நட்பும் நயவஞ்சகமும்

ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சியைக் கடுமையாகச் சாடி வந்த ஜனாதிபதியும், தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தோழமை பூண்டுள்ள ஜே.வி.பியும் நோர்வே அரசையும் மிக மோசமாக விமர்சித்து வந்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இதேவேளை, சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக்கு உத்தரவாதம் தர வல்ல ஜாதிக ஹெல உறுமய, சமாதானப் பேச்சுவார்த்தையையும், சமஸ்டித் தீர்வையும் கடுமையாக எதிர்ப்பதுடன், நோர்வேயின் பங்குபற்றுதலை முழுமையாக எதிர்த்து வருகின்றது.

இந்நிலையில், அடுத்தமாதம் 18ஆம் திகதி பாராளுமன்றம் கூடவிருக்கின்றது.

### புலிகளின் பதில்

சந்திரிகாவின் வேண்டுகோள் குறித்தும், தமது அரசின் நிலைபாடு குறித்தும் செய்தியாளர்களிடம் தெரிவித்த நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர்,

இது விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்ததும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் தெரிவித்ததுடன், பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பமாகும் என தற்போதைக்கு கூறமுடியாது எனத்தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள், இடைககால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை ரணில் அரசிடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்தே, ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்தார் என பதை நினைவுபடுத்தும் அரசியல் அவதானிகள், மீண்டும் பேசசுவார்த்தையை ஆரம்பிபதானால், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை குறித்த பேச்சுக்களாகவே அது அமையும் சாத்தியம் உள்ளதெனவும், அது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்கவே விடுதலைப் புலிகள் சம்மதிப்பர் எனவும் தெரிவித்துள்ளனர்.

### கதிர்காமர் நிராகரித்தார்

ஆனால், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைககால தன்னாட்சி அதிகார சபை யோசனையை, ஜனாதிபதியும் அவரது ஆலோசகரான கதிர்காமரும் முன்னர் நிராகரித்திருந்தனர் என்பதும், ஜே.வி.பி.யினர் இதுவிடயத்தில் கடும் எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதம் இருக்க, அடுத்த மூன்று மாதத்திற்குள தற்போதைய ஆட்சி கவிழும் எனவும், மறு தேர்தல் விரைவில் வரும் எனவும், ஐக்கிய தேசிய முன்னணியினர் தெரிவிக்கின்றனர். இதேபோன்ற கருத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும முஸ்லிம் கட்சியினரும் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற சபாநாயகர் தேர்வில், எதிர்க்கட்சி வேட்பாளருக்கு வாக்களித்த ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள், தமக்கு கொலை அச்சுறுத்தல்கள் வந்தவண்ணம் இருப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, ஜனாதிபதியின் சமாதான முயற்சி என்பது வெறும் வாய்ச்சவடாலாகவே அமையும் எனவும், ஒருவேளை சமாதானத்தின்பால் ஜனாதிபதிக்கு பற்றுறுதி இருந்தாலும் அவரைப் பின்னணியில் நின்று இயங்குகின்ற சக்திகள் அதனை முறியடித்துவிடும் எனவும் அந்த அரசியல் ஆய்வாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(உ)

# ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்கமறுத்துவிட்டது இந்தியா

## அவரின் ஊடகப் பேச்சாளர் தகவல்

(லண்டன்)

இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள சமாதான முயற்சிகளுக்கு இந்தியா அனுசரணை வழங்குவதையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிகம் விரும்புகின்றார்.

ஆனால்; இந்தியாவோ சமாதான முயற்சிகளில் நேரடியாகத் தாம் தலையிடப் போவதில்லை என்று கூறி ஜனாதிபதியின் அழைப்பை ஏற்க மறுத்து விட்டது என ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம்பீரிஸ் தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்காக நோர்வேயின் உதவியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடியுள்ளமைக்கான காரணம் பற்றி ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஹரீம்பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த இரு வருடகாலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளில் நோர்வே சில தவறுகளை விட்டமையினாலேயே ஜனாதிபதி நோர்வேயின் அனுசரணையை ஏற்றுக் கொள்ள ஆரம்பிப்பதில் பின்நின்றார்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் நோர்வேயின் சமாதானக்குழுவிற்கு தவறுகளைச் சுட்டிக் காட்டி சில அறிவுரைகளையும் வழங்கினார். நோர்வேயும் தான் விட்ட தவறுகளை ஒப்புக்கொண்டு உரியமுறையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது.

இத்தகைய நிலையில் விடுதலைப் புலிகள் திடீரென சமாதானப் பேச்சில் இருந்து விலகிக் கொண்டதால் சமாதானம் கேள்விக்குறிக்குள்ளானது.

இந்நிலையில் மீண்டும் சமாதானத்தை மலரச் செய்ய தற்போதுள்ள அரசாங்கம் முயற்சியிலீடுபட்டு வருகின்றது.

இலங்கையின் நட்பு நாடான இந்தியாவின் பங்களிப்பையே பிரதமரும் ஜனாதிபதியும் அதிகம் விரும்பினார்கள். இதுபற்றிய அழைப்பை இந்தியாவிற்கு பகிரங்கமாக விடுத்தார்கள்.

ஆனால், இந்தியா அதனை ஏற்க மறுத்துவிட்டது. ஆயினும், அரசினால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்திருக்கின்றது.

எனவேதான் நோர்வேயின் உதவியை மீண்டும் ஜனாதிபதி நாடியுள்ளார். அதற்கான அழைப்பை நோர்வேக்கு ஜனாதிபதி விடுத்த போது நோர்வே அதனை உற்சாகத்துடன் வரவேற்றுள்ளதுடன், புலிகள் இணங்கினால் தாம் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்வதாக தெரிவித்துள்ளது என்றார்.

(உ-62,10)

## இராமநாதன் கல்லூரி மாணவிகள் நாவன்மைப் போட்டியில் முன்னணி

கொழும்பு விவேகானந்த சபை அண்மையில் பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய சுவாமி விவேகானந்தர் நாவன்மைப் போட்டியில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் முன்னணி இடங்களைப் பெற்றுள்ளனர்.



மேற்பிரிவு நாவன்மைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற செல்வி சங்கவை சிவானந்தம்.



இந் நாவன்மைப் போட்டி யில், கீழ்ப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட செல்வி பிரியங்கா குணநாயகம்.



இதில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட செல்வி சாம்பவி ரமணன்.

## மாத்தளை மாவட்ட நோயாளர்கள் ஆர்ப்பாட்டம

(மாத்தளை)

மாத்தளை மாவட்ட வைத்திய சாலையில் தங்கிச்சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் மத்திய மாகாணசபை அதிகாரிகளுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இவ் வைத்தியசாலையில் புதிதாக விடுதி ஒன்று அமைக்கப்பட்ட போதிலும், அங்கு நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை.

இதனைக் கண்டித்தே வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடடனர்.

சுமார் 12மணிவரை நீடித்த இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக வைத்தியசாலையின் பணிகள் யாவும் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தன.

(தி-63)

## முன்பள்ளி மழலைகள் கண்காட்சி

(பாசையூர்)

தென்மராட்சி முன்பள்ளி மழலைகளின் கண்காட்சி இன்று காலை 9மணிக்கு யா/மசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதமும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜும் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-72)

## இரங்கற் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

அமரர் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் முதலாம் வருட இரங்கற் திருப்பலி நாளை திங்கட் fpik gpg.5 kz pfF ah/ புனிதமரியன்னை பேராலயத்தில் இடம்பெறவுள்ளது.

(உ)


## பிறந்ததின வாழ்த்து

### கந்தசாமி ஆனந்தன்

கந்தசாமி ஆனந்தன் அவர்கள் தனது 30ஆவது பிறந்த தினத்தை இன்று புலோலி, தெற்கு கூவிலில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். அவரை அவரது தந்தை ஆ.கந்தசாமி, தாயார் க. யோகேஸ்வரி, மனைவி ரமணி, பிள்ளைகளான அஜந்தன், அனோச், சயிந்தா, சாளனி ஆகியோரும் நண்பர்களான தங்கத்துரை, சிவனேசன், எஸ்.ஐ.நேசன், அரவிந் தன், நாகேஸ்வர சர்மா, அருந்தவ ராசா, பரமநாதன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரும் பல்லாண்டு காலம் பல்கலையும்பெற்று வாழ்க வென வாழ்த்துகின் றார்கள்.

(C-136) நண்பர்கள்

## சபாநாயகர் தெரிவின்போது

# எம்.பிக்கள் நடந்துகொண்ட விதம் ஜனநாயக வரம்பை மீறிய செயல்

## சட்டத்தரணி அப்துல் லதீப்

(கொழும்பு)

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 13வது நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஆளும் கட்சியினருக்கு ஆதரவளித்திருந்தால், அது சமாதான முன்னெடுப்புகளுக்கு பெரும் உந்துசக்தியாக அமைந்திருக்கும் என சிரேஷ்ட சட்டத்தரணி அப்துல் லதீப் தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டு வரும் விடியும்வேளை நிகழ்ச்சித் தொடரில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையின் புதிய பாராளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் எந்தவொரு நாட்டின் நாடாளுமன்றத்திலும் இடம்பெறாத குழறுபடிகள் இடம்பெற்றன.

ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பது அந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டங்களே. இதனாலேயே சட்டம் உயர்வான ஒன்றாக மதிக்கப்படுகிறது.

இந்தச் சட்டத்தை நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கும் சட்ட மூலமாக உள்ள பிரேரணையை சட்டமாக்குவதற்கும் கையெழுத்திட்டு அனுமதி வழங்கும் பாரிய பொறுப்பைக் கொண்ட புனிதமான பதவி சபாநாயகர் பதவியாகும்.

### ஜனநாயகவாதி

இவ்வாறு புனிதத்தன்மை பொருந்திய சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர் ஓர் ஜனநாயகவாதியாகவும் நடுநிலையானவராகவும் இருப்பதுடன், அவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்போரால் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுவே ஏற்புடையது.

ஆனால், எமது நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகர் தெரிவானது ஜனநாயகம் வெட்கித் தலைகுனியும் விதத்தில் அமைந்துள்ளது. பாராளுமன்றத்தின் தாய் என வர்ணிக்கப்படும் இங்கிலாந்தில் கூட இன்றுவரை நடந்திராத ஓர் கேலிக்கிடமான சம்பவம் எமது நாட்டின் சபாநாயகர் தெரிவின்போது இடம்பெற்றுள்ளது.

அந்தவகையில், ஆட்சியமைத்துள்ள அரசதரப்பு முன்மொழிந்த சபாநாயகரை எதிர்கட்சியினர் நிராகரித்து தமது தரப்பில் ஒருவரை சபாநாயகராக முன்மொழிந்தனர். இதன் விளைவாகவே மூன்று தடவை வாக்கெடுப்புச் செய்ய வேண்டிய நிலையேற்பட்டது.

இவ் வாக்கெடுப்புகளின் போது பாராளுமன்றத்திற்கு வெளியே நடக்கும் வாககெடுப்புக்களைவிட மோசமான ஜனநாயக மீறல்கள் இடம்பெற்றன.

### புதிய கேள்வி

இது மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றுள்ளவர்கள் உண்மையிலேயே ஜனநாயக வாக்கெடுப்புகள் மூலம் தானா தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற கேள்வியை உருவாக்கியுள்ளது.

எனவே, நாட்டின் ஜனநாயகத்தையே கேலிக்கிடமாக்கிய இந்த சபாநாயகர் தெரிவு எமக்கு இன்னும் ஒரு செய்தியைக் கூறியுள்ளது. அது நாட்டின் எதிர்காலம் மோசமான நிலையை எட்டியுள்ளது என்பதுதான்.

இந்த வாக்கெடுப்புகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்பொழுது எதிர்க்கட்சியாக உள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்துள்ளனர்.

### சபாநாயகர் தெரிவு

சிங்களப் பேரினவாதக் கட்சிகள் எதுவாக இருந்தாலும் அது தமிழ் மக்களுக்குச் சாதகமானதொரு தீர்வைத் தந்துவிடப் போவதில்லை என்ற கருத்தில், சிங்களத் தலைமைகள் எதுவாக இருந்தாலும் தமக்கு ஒன்றுதான் என்று கூறிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சிங்கள இனத்தவர் ஒருவரை பாராளுமன்றத்தின் தலைவராகத் தெரிவு செய்யும் சபாநாயகர் தெரிவில் பங்கெடுத்திருக்கக் கூடாது.

மாறாக, சமாதான முன்னெடுப்புகளின் முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு அதில் அவர்கள் பங்கேற்பதனால், அடுத்து சமாதானப் பேச்சுக்களை நடத்தப்போகும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தமது ஆதரவினை வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால், எத்தனை தீங்குகளைச் செய்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தமது ஆதரவு வழங்கப்படும் என்பதை தெளிவுபடுத்துவதைப் போல் இம்முறை தமது ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு வழங்கியுள்ளனர்.

இதேபோல், ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் நடுநிலை வகிக்கப்போவதாகக் கூறி மக்கள் ஆணையைப் பெற்று நாடாளுமன்றம் சென்றனர். ஆனால், அங்கு தாம் ஒரு துறவிகள் என்பதை மறந்து கேலிக் கூத்தாடியதுடன், முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்களால் 3 குழுக்களாகவும் பிரிந்துள்ளனர்.

### மக்கள் ஆணை

இது மக்கள் ஆணையை மீறுவதுடன், பௌத்த சனத்திற்கே இழுக்கை உருவாக்கும் செயலாகும்.

இதனைவிட, முஸ்லிம் காங்கிரஸ் தனது வழமையான பாணியில் வீராப்பாய் பேசிவிட்டு பின் அது தோல்வி கண்டதால் ஆட்சியமைக்கும் அரசிற்கு தொடர்ந்தும் தொந்தரவு கொடுத்து மீண்டும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வரை நாடகமாடத் தொடங்கியுள்ளது.

எதையும் சாதிப்பதற்குத் திராணி அற்ற முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலுக்கு முன் செய்த பிரகடனங்களை நிறைவேற்ற முடியாது மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் எடுபிடியாகவே செயற்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-4,60,63)

## எதிர்க்கட்சி உறுப்பினர் சபாநாயகரானமை

# பாராளுமன்ற உரிமைகளை காப்பாற்றக் கிடைத்த சந்தர்ப்பம்

### முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் பாராளுமன்றத்தின் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பதின்மூன்றாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த லொக்கு பண்டார கடந்த வியாழனன்று தெரிவு செய்யப்பட்டமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1960ஆம் ஆண்டும் இதே போன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால், இம்முறை எதிரணியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராக வருவதைத் தடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பகீரதப் பிரயத்தனம் செய்தது.

இறுதியில் அரசின் சகல முயற்சிகளும் தோல்வி கண்டு ஒரு வாக்கு வித்தியாசத்தில் எதிரணியைச் சேர்ந்த லொக்கு பண்டார சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம)

## மேதினக் கூட்டங்களை நடத்த அரசியல் கட்சிகள் தயார்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பிரபல அரசியல் கட்சிகள் மேதினக் கூட்டங்களை விமரிசையாகக் கொண்டாடுவதற்குத் தயாராகி வருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டம் கொழும்பு நகர மண்டபத்திலும், ஊர்வலம் பி.ஆர்.சி. மைதானத்திலும் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் நடைபெறவுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊர்வலம் கம்பல் மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி கொழும்பு நகர மண்டபத்தை வந்தடையவுள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் பதுளை நகரில் நடைபெறவுள்ளது.

புதிய இடதுசாரி முன்னணி அதன் மேதினக் கூட்டத்தை கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. ஐக்கிய சோஷலி சக் கட்சி கொழும்பு லேயாடஸ் புறோட்வேயில் அதன் மே தினக் கூட்டத்தையும், மலையக மக்கள் முன்னணி தோட்டப் பகுதி ஒன்றிலும் நடத்தவுள்ளது. (தி-63)

## அம்பாறையில் வன்முறை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக அம்பாறை மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இந்த வன்முறைகள் இடம்பெற்றுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 21ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதனின் காரைதீவு அலுவலகம் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

### சர்வதேச இந்துமத குருபீடாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவுக்கு ஆன்மீகத் திருத்தல யாத்திரை சென்ற சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ, சிவாச்சாரியார், தனது ஆன்மீகப் பயணத்தை முடித்துக்கொண்டு கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி இந்தியா சென்ற இவர், புத்தாண்டு தினத்தன்று சபரிமலை ஐயப்பன் கோவிலில் நாட்டிற்கு நிரந்தர சாந்தி சமாதானம் வேண்டி விசேட பூஜை வழிபாடுகளை நடாத்தியதுடன், திருச்செந்தூர், மதுரை மீனாட்சி, பழனி, காஞ்சி காமாட்சி அம்மன் கோவில், காஞ்சி காமகோடிபீடம், திருவேற்காடு உட்பட மேலும் பல ஆலயங்களையும் தரிசித்துக்கொண்டு தாயகம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

### கார் விபத்தில் மூவர் படுகாயம்

(புலோலி)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்றுகொண்டிருந்த கார் ஒன்று தொலைபேசிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் மந்திகை வைத்தியசாலைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துத்துச் சம்பவத்தில் பருத்துறையைச் சேர்ந்த கே.துஸ்யந்தன் (வயது-22), பி.இராஜரட்ணம் (வயது-68), இ.மகிந்தராஜா (வயது-23) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ச-150)

### "இலங்கை விகடன்" பங்குகள் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

"இலங்கை விகடன்" வாரசெய்திப் பத்திரிகையின் பங்குகள் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைகழக உபவேந்தர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தொடக்கவுரையை மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் பொன் கணேசமூர்த்தியும் தொகுப்புரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சணமுகதாசும் நிகழ்த்தவுள்ளனர்.

## இன்று ஒரு தகவல்

# முதுமையில் மனநோய்

இன்று ஒரு தகவலில் மனநோயைப் பற்றி அடிக்கடி பார்க்கிறோம். ஏனென்று இன்னும் தெரியவில்லை. தற்செயலாக அடிக்கடி இதைப் பற்றிப் பேசும்படி ஆகிவிட்டது. மனநோய் என்பது ஒரு பொதுவான நோய்தான். இது எல்லோருக்கும் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இருந்தாலும் இளமையின் தொடக்கத்திலும் முதுமையின் தொடக்கத்திலும் இது வருவது உண்டாம்.

வயதான காலத்தில் இது ஏன் அதிகமாக வருகின்றது? அந்தச் சமயத்தில் மூளையின் செயல்திறன் பாதிப்படைகிறது. அதனால் மற்றவர்களைவிட இவர்களுக்கு அதிகமாக மனநோய் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. அதுவரையில் தனியாகச் சுதந்திரமாக இருந்தவர்கள் வயதான பின் அடுத்தவர்களை எதிர்பார்த்திருக்கவேண்டிய சூழ்நிலை. சமூக ரீதியாகப் பார்த்தாலும் பொருளாதார ரீதியாகப் பார்த்தாலும் உடல்நல ரீதியாகப் பார்த்தாலும் இவர்கள் மற்றோரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை. சுறுசுறுப்பாக எல்லா வேலையும் செய்துகொண்டிருந்தவர்கள் சும்மாவே உட்கார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை. இதனால் மனம் கெட்டுப் போகிறது.

முதியவர்களுக்கு ஏற்படும் மனநிலை பாதிப்பை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று மனக்குழப்பம்-**Confusion.** இரண்டாவது அறிவுத்திறன் வீழ்ச்சி-**Dementia**. மூன்றாவது மனத்தளர்ச்சி-**Depression**. இரத்தக் குழாய்களில் ஏற்படும் மாற்றங்களால் மூளைக்குத் தேவையான சத்துக் குறைந்து போகிறது. அதனால் மூளை சரிவர வேலை செய்யாமல் ஒருவிதமான குழப்பம் ஏற்பட்டுவிடும். இந்த நிலையில் நல்லா இருக்கும் ஒருவர் திடீரென்று தமது சுற்றுப்புறத்தை மறந்துவிடுவார். நாம் எங்கிருக்கிறோம் என்ன செய்கிறோம் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது யார்யார் இருக்கிறார்கள் ஒன்றும் புரியாது.

நேரம் காலம் இடம் தெரியாமல் அவரும் குழம்பி, அடுத்தவர்களையும் குழப்புவார். இல்லாததை இருப்பதாக நினைப்பார். பயந்த நிலையில் காணப்படுவார். இந்த நிலை சில நொடிகள் முதல் சிலமணி நேரம்வரை நீடிக்கும். பின்பு சரியாகிவிடும்.

இப்படி ஏற்படுவதற்கு என்ன காரணம் தெரியுமா? மூளைக்குப் போகும் இரத்தம் குறைந்துவிடும். தூக்க மாத்திரை, நரம்புத் தளர்ச்சிக்குக் கொடுக்கும் மாத்திரை போன்ற சில மருந்துகளாலும மனக் குழப்பம் உண்டாகும். உடம்பில் மற்ற பாகங்களில் நோய்க்கிருமிகளின் பாதிப்பு இருந்தாலும் மனக்குழப்பம் உண்டாகும். அடிப்படைக் காரணம் என்னவென்று கண்டுபிடித்து அதற்கேற்ற மாதிரி சிகிச்சையளிக்க வேண்டும்.

அறிவுத்திறன் வீழ்ச்சி எதனால் வருகிறதென்று இன்னும் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் இதற்கேற்ற சிகிச்சையும் கிடையாது. 40 வயதிற்குப் பின்பு மூளை செல்கள் வீழ்ச்சியடைய ஆரம்பிக்கின்றது. தொடர்ந்து வயதாக ஆக அறிவுத்திறனுக்கு உறைவிடமான மூளைச் செல்கள் மேலும் வீழ்ச்சியடைகிறது. அதனால் அறிவுத் திறனிலும் வீழ்ச்சி ஆரம்பமாகிவிடும்.

நோயாளியின் மனப் போக்கை குடும்பத்தில் உள்ளவர்கள எல்லோரும் நன்கு புரிந்துகொண்டு அதற்கேற்றாற்போல் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் நாம் அவருக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி.

மனத் தளர்ச்சி நோய் எப்படிப்பட்டது தெரியுமா? இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எந்தக் காரணமும் இல்லாமல் மனம் தளர்ந்து போய்விடுவார்கள். அவர்கள் மீதே அவர்களுக்கு நம்பிக்கை இருக்காது. அதுமட்டுமல்ல ஏதோ ஒரு பெரிய தவறு செய்துவிட்டதாக அவர்களே தம்மைத் தாழ்வாக நினைத்துக் கஷ்டப்படுவார்கள். அடுத்தவர்களுக்குச் சுமையாக இருக்கின்றோமே என்று நினைத்து ஏங்குவார்கள்.

நமது உடல் மிகவும் கெட்டுப்போய்விட்டது. நம்மை யாரோ தண்டிக்கப் போகின்றனர் என்று நினைத்துக்கொண்டு மனதுக்குள் போராடுவார்கள். பல சமயங்களில் இதுபோன்ற நினைபபினால் தற்கொலை செய்யக்கூட முயற்சி செய்வார்கள்.

எதிலும் ஆர்வம் இருக்காது. பசி குறையும். அதனால் சாப்பாடு குறையும். உடல் இளைக்கும். முகத்தில் ஒருவித வெறுப்புணாச்சி வெளிப்படும்: இரவில் தூக்கம் வராமல் கஷ்டப்படுவார்கள். இந்த மனத் தளர்ச்சி நோய்க்கு இபபோது நல்ல மருந்துகள் உள்ளன. அதில் குணமாகிவிடும். சிலருக்கு மட்டும் மின் சிகிச்சை தேவைப்படும்.

ஆகக்கூடி வயதான காலத்தில் உடலையும் மனதையும நன்கு வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம். உடல் நன்றாக இருந்தால் மனதும் நன்றாக இருக்கும். சத்துள்ள ஆகாரம் சாப்பிடவேண்டும். முதுமையின் எதிரி தனிமை. அதைத் தவிர்கக வேண்டும். பேச்சுத் துணைக்கு யாரையாவது தயார் செய்ய வேண்டும். சூழ்நிலைக்கு ஒத்துப்போக வேண்டும்.

ஒரு பாட்டி தனது கணவனை அழைத்துக்கொண்டு டாக்டரிடம் வந்தார். "டாக்டர்! இவரைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். யாரையாவது எதிரில் பார்த்துவிட்டால் உடனே பேச ஆரம்பிக்கிறார்" என்றார். "அது ஒன்றும் தவறில்லையே தனிமையைத தவிர்ப்பதற்காக யாரையாவது எதிரில் பார்த்தால கொஞ்சம் பேசுவார் போலும்" என்றார் டாக்டர். அதற்கு அந்த் பாட்டி "அப்படி இல்லை டாக்டர்! யாரையாவது எதிரில் பார்த்துப் பேசினால் கூடப் பரவாயில்லை. முகம் பார்க்கும் கண்ணாடியை எதிரில் பார்த்தால் கூட உடனே பேச ஆரம்பித்துவிடுகிறார்! அதனால் தான் உங்களிடம் அழைத்துவந்தேன்" என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

## வீடுகள் படையினர் வசம்!

# மீளக் குடியிருக்க வந்த முஸ்லிம்கள் வாழ இடமின்றி பள்ளிவாசலில் தஞ்சம்

சாவகச்சேரி நக பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களது குடியிருப்புக்களிலிருந்து படையினர் வெளியேற மறுத்துவருவதால் மீளக்குடியமர வந்திருநத முஸ்லிம் குடுமபங்கள் தொடர் து அகதி வாழ்க்கையினை வாழ வேணடிய நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் மீளக்குடியமர வந்த குடும்பங்கள் தற்போது சாவகச்சேரி ஜும்மா பள்ளிவாசலில் தற்காலிகமாகத தங்கவைக்கப்பட்டுள்ளன. புத்தளம் பகுதியிலிருந்து மீளக்குடியமர வந்த ஐந்துக்கும் மேற்பட்ட முஸ்லிம குடும்பங்களை அவர்களுடைய சொந்த வீடுகளுக்குத் திரும்ப படைத்தரப்பு அனுமதித்திருக்கவில்லை என தென்மராட்சி பிரதேச செயலர் யாழ். படைத் தலைமைக்கு முறைப்பாடு செய்துள்ளார். 1990 ஆம் ஆண்டின் இறுதியில் யாழ். குடாநாட்டிலிருந்து வெளியேறிய முஸ்லிம் குடும்பங்கள் படிப்படியாகத் தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றன. குறிப்பாக யாழ் நகரை அண்டியுள்ள முஸ்லிம் பகுதிகளிலும் இந்தக் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றன. இவ்வாறு சாவகச்சேரி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, புத்தளம் பகுதியில் வசித்துவந்த முஸ்லிம் குடும்பங்களே தற்போது மீளக்குடியமரும் நோக்கில் சாவகச்சேரி திருமபியுள்ளன.

(உ-121)

## வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் முயற்சியில் ஐ.ம.சு.மு.

# 30 ஆயிரம் பட்டதாரிகள் உட்பட 55ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

30 ஆயிரம் பட்டதாரிகளுக்கும், உயர்தரம் மற்றும் சாதாரண தரம் கற்றுவிட்டு வீட்டில் இருக்கும் 25 ஆயிரம் பேருக்கும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களுக்கான விண்ணப்பங்களை வழங்கும் நடவடிக்கைகள் இம்மாதம் 30ஆம்திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்தால் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலேயே இது அமைவதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலும் பட்டம் பெறாத வேலையற்ற 25ஆயிரம் முதல் 30 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் 15ஆம்திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகியவற்றில் சிததியடைந்த இளைஞர், யுவதிகளுக்கே இந்த வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும் சகல பட்டதாரிகளும் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் வேலைத் திட்டக்கொள்கை ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-121)

## இராசி பலன்

**25.04.2004**

**(சித்திரை 12,**
**பஞ்சமி பி.இ. 3-58 மணிவரை**
**மிருகசீரிடம் மாலை 6-59 மணிவரை**
**இராகுகாலம் 9.00-10.30 மணிவரை**
**சுபநேரம் 3.00-4.30 மணிவரை**

**மேடம்**
காரிய அனுகூலம், தொழில்சிந்தை, கூட்டு முயற்சி, போசன நன்மை.

**இடபம்**
உணர்ச்சிவசப்படல், அதிகசெலவு, காரிய தாமதம, கௌரவக்குறைவு.

**மிதுனம்**
கற்பனைமிகுதி, பிரயாண நன்மை, நல்ல முயற்சி, செய்தொழில் நன்மை.

**கடகம்**
பிரயாணம், வாக்குமேன்மை, சுபகாரியச் செலவு, குடும்ப நலம்.

**சிங்கம்**
எடுத்த கருமங்கள் கைகூடும், தொழிலில் ஆர்வம், பெருமையடைதல், தனவரவு.

**கன்னி**
எடுத்த கருமங்கள் கைகூடும், சுப நிகழ்வு, நண்பர்கள் சந்திப்பு, மேன்மை.

**துலாம்**
தொழில் சிந்தை, கட்டுப்பாடு, பிரயாணம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
அமைதிக் குறைவு காரிய தடங்கல், இடமாற்றம், வாகன பயம்.

**தனுசு**
குடும்ப மகிழ்ச்சி, பிரயாணம், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்.

**மகரம்**
தேகாரோக்கியம், எடுத்த கருமங்கள் கைகூடும், தொழில் சிந்தை, விருந்துபசாரம்.

**கும்பம்**
சொத்துப் பிணக்கு, புதிய திருப்பம், முயற்சி தாமதம், பெரியோர் மதிப்பு.

**மீனம்**
மாதாசுகம், எதிர்பாராத மனஸ்தாபம், அதிக வார்த்தை, காரிய தாமதம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

## க.கா.குழுவின் வழித்துணையுடன்

# கிளி. சென்ற ரமேஸ் குழுவினர் மீண்டும் மட்டு. திரும்பினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையகத்துக்கு, கடந்த செவ்வாய்க்கிழமை சென்றிருந்த மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தலைமையிலான 13 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் மீண்டும் மட்டக்களப்பு திரும்பினர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் வழித்துணையுடனும், இராணுவ கவச வாகனங்களின் பாதுகாப்புடனும் இவர்கள் கிளிநொச்சியிலிருந்து மட்டககளப்பு மாவட்டத்திற்கு அழைத்து வரப்பட்டதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு திரும்பிய இவர்கள் தங்களது கட்டுப்பாட்டில்உள்ள பிரதேசத்துக்கு சென்றதாக, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டககளப்பு மாவட்ட அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பை மேலும் வலுவு;ட்டும் வகையில், இக்குழுவினர் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடவே கிளிநொச்சி சென்றிருந்ததாகக் கூறப்படுகிறது. (உ)

# சீரற்ற பேருந்துச் சேவையால் சிரமம் அனுபவிக்கும் மாணவர்கள்

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து யாழ் நகரப் பாடசாலைகளுக்கான சேவையில் ஈடுபடும் பேருந்துகள் சீரான நேரத்தில் தமது சேவையை மேற்கொள்வதில்லையென மாணவர்கள் மற்றும் பெற்றோர் தரப்பில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

உசனில் இருந்து யாழ். நகரப் பாடசாலைகள் வரையில் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் இப் பேருந்துகள் நேர அளவீட்டின் அடிப்படையில் சாவகச்சேரிக்கு காலை 7.30 மணிக்கு சென்றடைய வேண்டும்.

ஆயினும், இப்பேருந்துகள் சுமார் 10,20 நிமிடங்கள் முன்பதாகச் சாவகச்சேரியைக் கடந்து செல்வதுடன் சில நாட்களில சாவகச்சேரியிலிருந்தே இப்பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பதாகக் கிளம்பியும் சென்று விடுகின்றன.

இதனால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற அதேவேளை, இப்பாடசாலை சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் புறப்படும் நேரத்தை சம்பந்தப்பட்டோர் கவனத்தில்எடுத்து விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் பெற்றோர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

(உ-37)

# மிற்சுபிஸி நிறுவனம் மூடுவிழாவை நோக்கி

(ரோக்கியோ)

ஜப்பானின் நான்காவது மிகப் பெரிய மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனமான மிற்சுபிஸி மோட்டோர் கோப்பரேஷன் மிகவும் இக்கட்டான நிலைமைக்குள் தள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நிறுவனத்தின் பிரதான பங்காளரான ஜேர்மனியின் டெயிம்லர் கிறிஸ்லர் நிறுவனம் தனது 37 வீத பங்குகளையும் விற்றுவிட்டுத் தான் வெளியேறுவதாக அறிவித்துள்ளது.



தனது தொழிலநுட்பத் தவறுகள் சிலவற்றை மிற்சுபிஸி நிறுவனம் அறிவித்ததைத் தொடர்ந்து இதன் தயாரிபபுகளுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்து மிக்வும் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனமாக இது மாறியது.

இந்நிறுவனத்தைத் தூக்கி நிறுத்த ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிடக்கூடிய புதிய பங்காளியை இந்நிறுவனம் தேடுகிறது. இந்நிலை நீடித்தால் இதனை மூடிவிடும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய அரசாங்கம் இது குறித்து தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளது. (யே)




இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் தீவிரவாதிகள் நடைபெறும் தேர்தல்களை குளப்புவதற்கு திட்டமிட்டுவருவதாகவும் அதனை முறியடிக்கும் விதத்தில் திடீர் முற்றுகைகளை மேற்கொள்ளும் இந்திய இராணுவத்தினரைப் படத்தில் காண்கின்றீர்கள்.

# மின்சார வயர்களில் மசகு ரயில் முட்டியது

## வடகொரிய விபத்துக்குக் காரணம்

(பியோங்யாங்)

ரயில் பாதைக்கு அருகே செல்லும் மின்சார வயர்கள்




மசகு எண்ணெய் ஏற்றிவந்த ரயிலில் முட்டியதனால் எண்ணெய் டாங்கிகள் வெடித்துச் சிதறிப் பெரும் அனர்த்தம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. சுமார் இரண்டாயிரம் வீடுகள் இதனால் தரைமட்டமாகின.

உலகெங்கிலும் உள்ள தொண்டர் நிறுவனங்கள் உடனடி நிவாரணப் பணிகளில் முனைப்புடன் இறங்கியுள்ளன. நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தும் உள்ள இவ் விபத்தில் வட கொரியாவுக்கு உதவ ஐ.நா. செயலர் உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

விபத்து நடந்த இடமான ரியோங் சொன்னில் உலக சுகாதார ஸ்தாபனமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தற்காலிக தங்குமிட வசதிகளையும் உடனடிச் சுகாதார வசதிகளையும் ஏற்படுத்துவதில் முனைப்பாக இறங்கியுள்ளன. (யே)



தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் உள்ள தடுப்புவேலியருக்கில் மண்டியிட்டுத் தென்கொரியப் பெண் ஒருவர் வடகொரிய விபத்தில் இறந்தவர்களுக்காகச் செபிக்கிறார்.



தாய்லாந்தில் முஸ்லிம் தீவிர வாதிகளின் தாக்குதல்கள் அதிகாரித்துள்ள நிலையில் தீவிரவாத தாக்குதல்களை எதிர் கொள்ளக்கூடிய முறையில் தாய்லாந்து இராணுவத்தினருக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான விசேடபயிற்சியை முடித்துக் கொண்டு முதன் முதலில் வெளியேறும் விஷேட அதிரடிப் படைக் கொமாண்டோக்களைப் படத்தில் காண்கின்றீர்கள்.

# சீனாவில் சார்ஸ் நோயாளி மரணம்

(பீஜிங்)

2004 ஆம் ஆண்டின் முதல் சார்ஸ் நோயாளி கடந்த திங்கடகிழமை மரணமானதாக அறிவிக்கப்படுகிறது.

இந்நோயால் பீடிக்கப்பட்டு குணமடைந்துள்ள ஒரு பெண்ணின் தாயாரே இவ்வாறு இறந்தவர் என்று அறிவிக்கப்படுகிறது. இத்தவிர, இன்னும் மூவா கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.



இம்மரணத்தைத் தொடர்ந்து சீனாவின் விமான நிலையங்கள் துறைமுகங்கள் என்பவற்றில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுக் கடுமையான சோதனை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வெளிநாட்டவர்கள் சீனாவுக்குள் வருவதும் சீனாவில் இருந்து சீனர்கள் வெளியேறுவதும் கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (யே)

# ஜப்பானிய இளவரசிக்கு அழுத்தங்கள் அதிகரிப்பு

(டோக்கியோ)

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு ஜப்பானில் ஏற்படுததப்படட சட்டங்களின் அடிப்படையில் ஆண்வாரிசுகள் மட்டுமே முடிக்குரியவர்களாக முடியும. இதனடிப்படையில் பட்டத்துராணியான மஸக்கோ வுக்கு அழுத்தங்கள் அதிகரித்தமையால் அவ் அரண்மனையை விட்டு தனது தாயாரிடம் சென்றுள்ளார்.

முடிக்குரிய இளவரசர் நறுஹிட்டோவை 11 வருடங்களுககு முன்பு மணந்த இவ் ஐக்கோ எனும் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். இளவரசரின் சகோதரருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். அவரின் 35 வயதான சகோதரி, தான் இப்போது மணம்புரியப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். இதனால் ஒரு ஆண் வாரிசைப பெற்றுத் தரும் பொறுப்பு இளவரசி மீது திணிக்கப்படுவதால் அவர் மிகுந்த மன அழுததங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இதன் காரணமாக இளவரசருககும் அவருக்குமிடையிலான வேறுபாடுகளும் அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது.



பிரிட்டன், சுவடன் போன்ற நாடுகளில பெண்கள் முடிசூடுவதை உதாரணம் காட்டி ஜப்பானிலும் சட்ட நடைமுறைகளை மாற்றுமாறு கோரிக்கைகள் விடப்பட்டு அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் அந்நாடு இறங்கியுள்ளது. (யே)

## உலக தரிசனம்

### எரிகற்களால் சீனாவில் பாரிய சேதங்கள்

(பெய்ஜிங்)

விண்ணிலிருந்து வந்து விழுந்த பாரிய எரிகற்களால் சீனாவில் பாரிய சேதங்கள் ஏற்பட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மரங்கள் வேரோடு தூக்கி வீசப்பட்டதாகவும், நூற்றுக்கணக்கான வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டதாகவும், 22 உயர் நீர்மின் நிலையங்கள் சேதமடைந்தும், 2730ஏக்கர் பயிர்கள் அழிந்ததாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏழு பொது மக்கள் மரணமடைந்தும, 207 பேர் படுகாயங்களுக்குமுள்ளான இச்சம்பவத்தின்போது சுமார் 23 மீற்றர் வேகத்தில் ஒரு விநாடிக்கு இந்த எரிகற்கள் பயணித்துச் சென்றதாகவும் அறிவிக்கப்படுகிறது. (யே)

# பங்களாதேஷில் பதற்றம் 5000 பேர் தடுத்துவைப்பு

பங்களாதேஷின் அவாமி லீக் கட்சி, ஆட்சியிலிருக்கும் அரசு பதவி விலக காலக்கெடு விதித்ததைத் தொடர்ந்து அங்கு கைது செய்து தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களின் தொகை 5 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில ஈடுபடுவதற்காக நகர் நோக்கி வருபவர்களை ரயில் நிலையங்களிலும் பஸ்களிலும் வைத்து பொலிஸார் கைது செயவதாக எதிர்க்கட்சிகள் அறிவிக்கின்றன. ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்படட ஒரு அரசை பதவி விலகுமாறு காலக்கெடு விதிப்பது ஏற்றுக்கொள்ளக்



கதல்ல என்று பிரதமர் காலிதா ஸியாவின் அதிகாரி யொருவர் அறிவித்தார். இதேவேளை எதிர்க் கட்சித் தலைவி ஷெய்க் ஹஸீனா ஏப்ரல 30 ஆம் திகதிக்கு முன், அரசு பதவி விலக வேண்டும் என்று அறிவித்துள்ளார்.

# முத்தையா முரளிதரன் விடயத்தில் முரண்படும் முக்கியஸ்தர்கள்

முத்தையா முரளிதரனின் பந்து வீச்சுக் குறித்து இப்பொழுது



கிரிக்கட் உலகில் நிறைய அபிப் பிராய பேதங்கள் எழுத்துள்ளன. சர்வதேசநடுவர் ஸ்ரீவ் பக்னர் முரளியின் பந்து வீச்சை நேரடியா கப் பார்க்கும் போது பந்தை வீசி எறிவ தாகத் தோன்றினாலும், தொலை க்காட்சி சலனப் படங்களில் பார்க்கும் போது உண்மைநிலை புலப் படும் என்று தெரிவித்தார். அவரது பந்து வீச்சுத் தெடப்பாக தீர்மானிக்கவுள்ள வர்கள் தொலைக் காட்சி சலனப் படங்களை உண்ணிட் பாகஅவதா னித்த பின்னரே இறுதித தீர்மானத்தை எடுக்கவேண்டு மென பக்னர் கேட்டுக் கொண்டுளளார்.

இங்கிலாந்து அணியின்முந்நாள் தலைவர் நஸார் ஹுசைன கையை அவர் அளவுக்கதிமாகத் திருப்புகிறா என்று முதன் முதலில்எடுத்துக் கூறி யவர் என்று கூறப்படுகிறது.

இங்கிலாந்தின் ஒவ் ஸ்பின்னரான றொபேட் குறொவ்ட் கூறுகையில் முரளி கையை அதிகமாக நேராககியிருக கிறார்.அது முறை கேடாகும் என்று தெரிவிக்கிறார்.

இவ்வாறான நிலையில் முர



ளிக்குச் சர்வதேச கிரிக்கெற் சபை எச்சரிக்கை செய்திருப்பது குறிப் பிடத்தக்கது

(யே-121)

## அவுஸ்திரேலிய நீச்சல் முடிவுகள்

அவுஸ்திரேலியாவில் நடை பெற்றுவருகின்ற அவுஸ்திரேலிய தேசிய சம்பியன் ஷிப் கிண்ண ஒலிம்பிக் தெரிவுக்குழுவின் ஆண் களுக்கான 100மீற்றர் நீச்சல் போட்டியில் ஒலிம்பிக் தங்கப்பதக் கம் பெற்ற இயன்தோர்ப் வெற்றி பெற்றிருக்கின்றார். இயன் தோர்ப் இந்தத் தூரத்தை 48.83விநாடிக ளில் நீந்தி முடித்திருக்கின்றார். 49.31விநாடிகளில் நீந்திய அஸ்லி கொலஸ் இரண்டாம் இடத்தை யும், 50.08விநாடிகளில் நீந்திய டொட் வியர்சன் 3ஆம் இடத்தை யும் பெற்றிருக்கின்றார்கள்.

200மீற்றர் நீச்சல் போட்டியில் ஜிம்பொயிற்றர் முதல் இடத்தை பெற்றிருக்கிறார். பெண்களுக்கான 200மீற்றர் நீச்சல் போட்டியில் பற் றியாதோமஸ் வெற்றிபெற்றிருக் கின்றார். இவர் இந்தத் தூரத்தை 2 நிமிடங்கள் 6.79விநாடிகளில் நீந்தி முடித்தமை குறிப்பிடத்தக் கது.

### ஊர்காவற்றுறை விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறைப் பிரதேச செய லக விளையாட்டு அவை நடாத் தும் ஊர்காவற்றுறைப் பிரதேச செய லகப் பிரிவுக்கான விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடை பெறும்.

ஊர்காவற்றுறை உதவிஅரச அதிபர் திரு. ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடை பெறும் இந் நிகழவுக்கு யாழ். மாவட்ட விளை யாட்டு அதிகாரி திரு.றொகான்ராஜ சிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார். (யே)

## சான் அன்ரோனியோ மெம்பிஸ்சை வென்றது.

தற்பொழுது அமெரிக்காவில் நடை பொற்று வரும் தேசிய கூடைப் பந்தாட்டப் போட்டிகளில் சான் அன்ரோனியோ அணிக்கும் மெம்பிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி ஒன் றில் சான் அன் ரோனி யோ அணிவெற்றி பெற்றது.



ஆரம்பம் முதல் சான் அன்ரோ னியோ அணி யின் ரோனிப்பாக்கர் ஆட் டத்தைமிக விறுவிறுப்பாக வைத்திருந்தார். அவருக்கு சவால்விடும் வகையில் மெம்பிஸ் அணியின் கறிஸ் லிஸ் பதிலுக்கு பதில் பந்துகளைக் கொண்டுவந்து கூடை யில் போட்ட படி இருந் தார்.

இடைவேளைக்கு முன் 38-36 என்ற புள்ளிகள் அடிப்படையில் மெம் பிஸ அணிமுன்னணியிலிருந்த போதும் போட்டிமுடிவுற்றபோது 76-74 என்ற புள்ளிகள் அடிப்படை யில் ஒரு பாஸ்கற்றால் சான் அன்ரோனியோ அணி வெற்றி பெற்றது. (யே)

## மைக்கல் ஜோன்சன் சீனாவுக்குப் பயிற்சி?

ஐந்து தடவை ஒலிம்பிக் போட்டிகளில தங்கப்தக்கங்களை வென்ற 400 மீட்டர் சம்பியன் மைக்கல் ஜோன்சன் சீன மெய்வல்லுநர்களுக்குப் பயிற்சிய ளிப்பார் என்ற செய்திகளைச் சீனா மறுத்துள்ளது.



சீன மெய்வல்லுனர் சங்க அதிகாரி யான பெங சுயோங இது பற்றிக்கூ று கையில் வெளிநாட்டவர் ஒருவரைப் பயிற்சியாளராக எடுப்பது பற்றிச்சீனா இதுவரை சிந்திககவே இல்லை என்று தெரிவித்தார்.

சீனாவையும் அமெரிக்காவையும் சிண்டு முடியும் விதமான செய்திகள் எங்கிருந்து தான் வருகிறதோ என்றும் அவர் அலுத்துக் கொண்டார். (யே)

## ஷெல்சியா அணித் தலைவருக்கு யூபாக் கிண்ண நிர்வாகம் தடை

தற்பொழுது நடைபெற்றுவரும் யூபாக் கிண்ணஅரையிறுதிப் போட்டிகளின் முதல் சுற்றில் விளையாடும் செல் ஷியா அணியின் தலைவர் மார்ஷல் தெசெய்லிக்கு மூன்று போட்டிகளில் விளையாடத் தடை விதிக் கப்பட்டுள்ளது.



ஷெல்சியா அணி முதல்சுற்றின் அரையிறுதியில் மொனோக்கோ அணியிடம் 3-1 என்ற அதிர்ச்சி தேல்வி அடைந்த பொழுது மைதா னத்தில் ஏற்பட்ட வாக்கு வாதத்தில் எதிரணி வீரர் பெர்ணான்டோ மொறியன ரைத் தாக்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இத் தண்டணை வழங்கப்பட்டுள்ளது.

இத்தடையினால் இரண்டாவது சுற்று அரையிறு திகளில் ஏற்கனவே ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய எண்ணியிருந்த ஷெல்சியா அணி , மிகுந்த ஏமாறறத்திற் குள்ளாகியிருக்கிறது.

இத்தீர்ப்புக்கெதிராக முறையீடு செய்யப்போவதா கவும் மார்ஷல் இல்லா மல் அணிபெரும் நெருக்க டியை எதிர்நோக்கும் ஏனனில் அவர் ஒரு அனுப வம் வாய்ந்த வீரர்என்று பயிற்றுவிப்பாளர் குளோடி யோ றெனெஸ்ரி தெரிவித்தார்.

தொலைக்காட்சி சலனப்படங்களில் மார்சல் எதிராளியைக் கையால் தள்ளிவிடுவது தெளிவாகத்தெரிந்தது.

(யே)



இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் அன்ட்றூ பிளின் டொ:ப், போர்ட் ஒ:ப் ஸ்பெயினில் உள்ள அனாதைகள் இல்லத்திற்கு சென்றார். அங்கிருந்த சிறுவன் ஒருவனை தனது தோளுக்கு மேல் உட்கார வைத்திருக்கும் பிளின்டா:ப்.

## பிறையன் லாரா மீண்டும் அணியில் இணைந்துள்ளார்


தனது கைவிரலில் ஏற்பட்டகாயம் காரணமாக இன்று வரை ஒய்வு பெறுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த பிறையன் லாரா நேற்றைய ஒருநாள் போட்டியில் விளையாடக் களமிறங்கினர்.



இங்கிலாந்துக்கெதிரான நான் காவது டெஸ்ட் போட்டியின் போது 400ஓட்டங்கள் எடுத்து உலக சாதனை புரிந்த லாரா காயத்திற்குள்ளானார். அதன்காரணமாக ஏற்கனவே ஆரமப மாகி நடந்து முடிந்த இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடமலிருந் தார்.

ஆயினும் உடல்நிலை வழ மைக்குத் திரும்பியதையடுத்து அவர் நேற்றைய ஆட்டத்தில் கலந்து கொண்டார். இறுதியாக 400 ஓட்டங்கள் எடுத்தலாரா இன்று 0 எடுக்க வும் கூடும் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோகன் குறிப்பிட்டார். (யே)

## புதிய சாதனையை நோக்கி லான்ஸ் ஆம்ஸ்ரோங்



அமெரிக்காவின் தபால் திணை க்களத்தில் பணிபுரியும் லான்ஸ் ஆமஸரோங எனும் உலகப் பிரசித்தி பெற்ற சைக்கிள் வீரர் புதிய சாதனை முயற்சியில் இறங்கியுள்ளர்

டூர் டிஜோர்ஜியா என்னும் பிரபலமான நெடுந்தூர சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்று அமெரிக்காவில் நாடத்தப்பட்டு வருகிறது. இப போட்டியில் லான்ஸ் ஆம்ஸ்ரோங் ஏற்படுத்திய சாதனை நேரத்தைக் கடந்த 5 ஆண்டு களாக யாராலும் முறியடிக்க முடியாதிருக்கிறது.

தனது இந்தச் சாதனையை இவ் வருடம் தானே முறியடிக்கப் போவதாக் கூறும ஆம்ஸ்ரோங், கடின பயிற்சியின் பின்பு நேற்று சாதனையை முறி யடிக்கும் பரீச்சார்த்த முயற்சியில் இறங்கியுள்ளர். (யே)

# உதை பந்தில் கதை சொன்ன

**பகுதி 2**

1986 உலகக் கிண்ணக்காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்துக்கெதிராக மரடோனா போட்ட



இரண்டாவது கோல் ஆர்ஜென்டினாவை அரையிறுதிக்கு இட்டுச் சென்றது. இறுதியில் உலகக் கிண்ணத்தையே வெல்லவைத்தது என்பது உண்மைதான்.

ஆனால், அவர் இரண்டாவதாகப் போட்ட கோல், கையால் மிக நேர்த்தியாகத் தட்டி அனுப்பப்பட்டது. அதை நடுவர் காணவில்லை. ஆனால், தொலைக் காட்சிக் கமெராக்கள் கண்டுப்பிடித்துக்காட்டின.

''அது கடவுளின் கரம் தந்த கோல்'' என்றார் மரடோனா. மரடோனாவின் முதல் கோல், ஆங்கிலேயரைவிட ஆர்ஜென்டினர்கள் மிகவும் அவதானமாக இருப்பதை உணர்த்தியது. அவரின் வெற்றிகரமான இரண்டாவது கோல் ஆங்கிலேயரைவிட அவர்கள்

# டியாகோ ஆமன்டோ மரடோனா

உதைபந்தில் உன்னதமானவர்கள் என்பதை வெளிக்காட்டியது.



இந்த இரண்டு நாட்டவருமே தசாப்தங்களாகத் தமக்குள் நீடித்த விரோதங்களுக்கும், குரோதங்களுக்கும் வடிகாலாக இப் போட்டியைப் பயன்படுத்தினர்.

அன்றைய தினம் ஆர்ஜென்டினர்களின் இரத்தத் துடிப்புக்கு ஆமன்டோ மரடோனா தீனி போட்டார். ஒரு சில மணித்துளிகளில் அவர்களின் ஆதர்ஷ புருஷராகவும் நட்சத்திரமாகவும் உயர்ந்தார்.

1989இல் நேப்பாலிக் கழகத்திற்காக யூபா கிண்ணத்தை அவர் தலைமையில் அவ்வணி வென்றபோது இத்தாலியின் உதைபந்து உலகத்தின் முடிசூடா மன்னனாக வலம் வந்தார்.

ஏறத்தாள ஒன்றரைத் தசாப்தமாக உதைபந்து உலகில் உன்னத ஸ்தானத்திலிருந்த மரடோனாவின் பொற்காலம் என்பது 1986 உலகக் கிண்ணம்தான். அதன் பொழுதுதான் அவர் புகழின் உச்சிக்குப் போனார். அதன் பொழுதான் அவரின் வீழ்ச்சியும் ஆரம்பமானது. பெயரும் புகழும், செல்வமும் செல்வாக்கும் அவரது கண்ணை மறைத்தன. கொக்கெய்ன் எனப்படும் போதை மருந்துப் பாவனைக்கு அடிமையானார் மரடோனா.

1986ல் 3-2 என்று கோல் வித்தியாசத்தில் லோதர் மத்தேயுஸின் ஜேர்மன் அணியை உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் தோற்கடித்த மரடோனா 1990இல் நடுவரிசை ஆட்டக்காரரான மத்தேயுஸின் நேர்த்தியான தலைமையிலான ஜேர்மனியிடம் அதே



எண்ணிக்கையில் தோற்றார். 1990இல் இறுதிப் போட்டி வரை மிகத் நேர்த்தியாக ஆர்ஜென்டீன அணியை இட்டு வந்தாலும் அவரது உற்சாகம் குன்றியே இருந்தது.

1991இல் போதைப்பொருள் பாவனைக்காக 15 மாத தடை விதிக்கபட்டார். கியூபாவில் மனநலப் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டார். மீண்டும் 1994 இல் அமெரிக்காவில் நடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும்போது போதைப் பொருள் பாவனை கண்டுபிடிக்கபட்டு வெளியேற்றப்பட்டார். மீண்டும் 1997இல் போதைப்பொருள் பாவனை மூன்றாவது தடவையாகவும் நிரூபிக்கப்பட்டது.



25ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 1997இல் உதைபந்து வாழ்விலிருந்து ஓய்வு பெற்றார் மரடோனா.

போதைப் பாவனையிலிருந்து மீள்வதற்காக மிகக் கடினமான மறுவாழ்வுத் திட்டங்களுக்குக் கீழ் பயிற்சி பெற்றும் அப்பழக்கத்திலிருந்து மீளவே முடியவில்லை. இதனால் உடல் பெருத்து இரண்டு தடவைகள் மாரடைப்புக்கு இலக்கானார்.

சேற்றில் பிறந்து, சேரியில் வளர்ந்து புகழின் உச்சிக்குப்போய் மீண்டும் சேற்றில் விழுந்து கிடக்கும்



ஒரு பிரகாசமான நட்சத்திரத்தின் வாழ்வு குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்திருந்தது. அத்துறை உதை பந்தாட்டம். பீலே, களிற,லோதர் மத்தேயுஸ், மரடோனா, ரொனால்டோ என்று எத்தனையோ மின்னும் தாரகைகளை உலகுக்கு வழங்கியது, வழங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும் வழங்கிக் கொண்டே இருக்கப் போகிறது இந்த உதைபந்தாட்டம்.


ஆனால், மரடோனாவைத் தனித்துக்காட்டும் விடயமொன்றிருக்கிறது. அதுதான் 'தேவையில் துடித்தெழுவது' (**Rising to the occasion**)

**பேதுரு யேசுதாசன்**

பிரான்ஸில் நடை பெற்ற உலகக் கிண் ணப் போட்டிகளில் பிரான்ஸ் அணியின் எந்த வொரு வீரருமே நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றவர்கள் அல்லர். இறுதியாட்டத்தில் பிரான்ஸை எதிர் கொண்ட பிரேஸில் அணியில் ரொனால்டோ, றிவால்டோ, பெபேற்றோ, ரொனால்டீனோ என்று நட்சத்திரப் பட்டாளமே நிரம்பி வழிந்தது. அடுக்கடுக்காகப் பிரான்ஸ் கோல்களைப் போட்டபடியிருந்தது. ஆனால் இத்தனை நட்சத்திரங்களிலிருந்தும் செத்த பாம்பாய் செத்துப் போனது பிறேஸில்.




ஆனால் 86 உலகக் கிண்ணத்தைப் பார்த்தவர்களுக்குப் புரியும், மிகப் பலமான ஜேர்மன் அணியை ஒரு கட்டத்தில் 2-2 என்று திகில் நிலையிலிருந்த போட்டியில், சுமார் ஆறுவீரர்களால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையிலும் அதை உடைத்தெறிந்து கொண்டு சென்று வெற்றிக் கோலைப் போட்டவர்



மரடோனா. அதுதான் அவரது சிறப்பு.ஒருவன் ஒரு தொழிலைத் திறம்படச் செய்யவேண்டுமானால் முதலில் அவன் அதை நேசிக்கவேண்டும். அதன்வழி அவன் சாதனை புரிய முடியும். பந்தை நேசித்து அப்பந்தைப் பந்தாடிய பம்பரம் மரடோனா என்றால் மிகையாகாது.

இப்பொழுது எழுத்துலக மேதை லியோ டோல்ஸ்டோய் சொன்ன வரிகளுக்கு மீண்டும் வருவோம்.

தொடங்குதலும் தூக்கியெறிதலும்
பிழைபுரிதலும் வதைபடுதலும்
குழம்பிக் கலங்குதலும் மீண்டும்
தொடங்குதலும் மீண்டும்
தூக்கியெறிதலும் வெற்றிபெற
இன்றியமையாவை!



மரடோனா கையால் கோல் போடும் காட்சி

இவ்வரிகளை இக்கட்டுரையின் முதற்பகுதியில் (23-ஏப்ரல் 2004) வலம்புரியில் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளேன்.வெற்றிபெற்ற எந்த மனிதனுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் எனும் கூற்றுத் தர்க்கத்துக்குரியது.ஆனால் டோல்ஸ்டோயால் மேற் சொல்லப்பட்ட அத்தனை அம்சங்களும் இருக்கும் என்பது மட்டும் திண்ணம்.

மரடோனாவின் மிக எளிய ஆரம்பமும் அதி துரிதமான புகழ் மிக்க வாழ்வும் நமக்கும் ஒரு பாடத்தைக் கற்றுத் தர வேண்டும்.யாருக்கோ பக்தனாகவும், யார் யாருக்கோ தொண்டனாகவும் நம்மில் அநேகம் பேர் வாழ்கின்றோம். நமது பிறப்பின் தார்ப்பரியம் பற்றி நிமிட நேரம் சிந்திக்க மறந்து விடுகிறோம். " இன்று வாழ்ந்த அதே வாழ்வை எதுவித மாற்றமுமின்றி நாளை வாழ்வதற்கு நாம் வாழத்தான் வேண்டுமா? என்றார் மார்சிம் கோர்க்கி.

மிக எளிமையான ஆரம்பம் காரணமோ என்னவோ தெரியவில்லை: ஆகா ஓகோ என்று புகழ் ஏணியின் உச்சிக்குப் போகையில் அவர் தன்னிலையை மறந்தார். ஆனால், மீண்டும் சேற்றில் விழுந்தார். மீண்டும் எழுந்து வர அவர் எத்தனையோ முயற்சி எடுத்தார். ஆனால் அவர் விரும்பியும் கூட அவரால் சில எல்லைகளைத் தாண்டமுடியாத எல்லையில் அவர் நின்றார்.

சூரியனைக் கையால் பிடிக்கும் தூரத்திற்குப் போன இந்தத் தங்கப் பொக்கிஷம் மாரடைப்பால் மரணமாவதைத் தடுக்க வேண்டி பரிதாபத்தில் தவிப்பதை உலகம் கவலையோடு பார்க்கிறது.

ஆயினும், சாதிக்க வேண்டியவைகளைச் சாதித்த நிம்மதி அவரிடம் தாராளமாகவே குடி கொண்டிருக்கக் கூடும் ஆனால், நாம்?

வீழ்வது வெட்கமல்ல
வீழ்ந்தே கிடைப்பதுதான் வெட்கம்
எழுந்து எதையாவது நல்லதாய்ச் சாதிக்கப் புறப்படுவோம்.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி. பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

114

## ஆறாம் பகுதி பரதவர் சாதி வழமை

### கல்யாணங்களில் நடக்கிற வெகுமதிச் சுதந்திரங்களுக்கு வகை

மாப்பிள்ளைக்குப் பெண் வீட்டார் சீதனம் கொடுக்கிறதல்லாமல், மாப்பிள்ளைக்கு புடைவைகள், மோதிரம் ஏதேனும் ரொக்கம், அவரவர் இயல்புக்குத் தக்கது கொடுக்கிறதுண்டு. இதுதவிரப் பெண் கூடப்பிறந்த சகோதரன் மாப்பிள்ளைக்கு கால் கழுவுகிறதுண்டு. அந்தச் சடங்கு முடிக்கிறதற்காக மாப்பிள்ளை இயல்புக்குத் தக்கது மோதிரமும் புடைவை வெகுமதி கொடுக்கிறதுண்டு. மைத்துனனும் நாலாம் நீர்ச் சடங்கில் மாப்பிள்ளைக்கு ஒலியல் அஞ்சு சுவடு புடைவையும் மோதிரமும் ஒலியல் வைத்து இனாம் பண்ணுகிறது. திரும்ப மாப்பிள்ளையும் ஒரு சுவடு புடைவை மாத்திரம் வெகுமதி பண்ணவேணும்.

இதுவல்லாமற் பெண்ணுக்கும் மாப்பிள்ளை கொடுக்கிற புடைவையை மாப்பிள்ளை சகோதரிகள் கொண்டு போய்க் கொடுக்கிறதுண்டு அதற்கு அந்த வஸ்திரக் கிறையத்திற் பாதி பெண் வீட்டார் மாப்பிள்ளை சகோதரிகளுக்குக் கொடுக்க வேணும். மாப்பிள்ளை சகோதரிகள் பெண்ணுக்குத் தாலி கட்டின சடங்கு பார்க்கிறதற்கும் அவரவர் இயல்புக்குத் தக்கது வரிசையாகச் சிறப்பாகச் சந்தனம், பன்னீர், பாக்கு, வெற்றிலை, பழங்கள், தேங்காய், இளநீர், மாலை இந்த வகைகளை கொண்டுபோய்ச் சடங்கு பார்ப்பார்கள். இவர்கள் கொண்டுபோன சாமான்களுக்கு(க்) கிறையம் நிதானம் பண்ணிக்கொண்டு அதற்கு இரட்டிப்பு விலை மாப்பிள்ளை தன் சகோதரிகளுக்குக் கொடுக்கவேணும்.

### சாதி மரியாதங்கள் நடக்கிற வகை

எங்கள் சாதிக்குச் சரியான மனுஷருக்குச் சாதி மரியாதங்கள் நன்மை தின்மைக்குக் குறையில்லாமல் நடக்கும். எங்கள் சாதியில் வந்து சேர்ந்து, நான்கு மூன்று தலைமுறை சென்று, அதன்பின் அந்தப் பிள்ளைகள் நடந்து கொள்ளுகிற ஒழுக்கத்துக்குத் தக்க சாதி மரியாதங்களின் அந்தஸ்த்துக்குத் தக்கது. ஏதேனும் செய்விக்கிறதாய் இருக்கும். சுப சோபனங்களிற் பந்திகளில் வைத்துச் சாப்பிடுகிறதாய் இராது. இதுவல்லாமல் அடிமைப்பட்டவர்கள், இட்டக்காரர் விபசாரிகளாகப் போறவர்கள், விபசாரத்திற் பிறந்தவர்கள், மகிமைக்குச் சரியில்லாத இளப்ப வேலை செய்யப்பட்டவர்களைக் கூடவைத்துச்சாப்பிடுகிறதுமில்லை. சாதி மரியாதங்களும் விலக்குதலாயிருக்கும்.

### வட்டிக்கு முதல் கொடுக்கிற விபரம்

அடைவின் பேரில் வாங்கவெனக் கடனாகவானாலும் முதல் கொடுத்தால் நூற்று(க்கு) ஒரு வராகன் வீதம் வட்டி வாங்குகிற நடப்பு. வட்டிக்குக் கொடுக்கிற பேர் அதிகமாக வட்டி கேட்டு வாங்(கு)கிறவனுஞ் சம்மதித்து அதிக வட்டிக்கு எழுதிக் கொடுத்திருந்தால் அவன் எழுதிக் கொடுத்த படியாகத் தீர்த்துக் கொள்ளாமல் விபகாரத்தில் வந்தால் நூற்றுக்கு ஒரு வீதம் வாங்கிக் கொள்ளச் சொல்லித் தீர்க்கிறதல்லாமல் அதிகம் வாங்கப்படாதென்று தீர்ப்புப் பண்ணுகிறது.

வட்டி வாங்கின பேர் நாலு வருடமும் (இ)ரண்டு மாதத்துக்குள்ளே தடையஞ் செலுத்தினாற் சென்ற நாளைக்குள்ள வட்டி வாங்கிக் கொள்ளுகிறது. நாலு வருடம் (இ)ரண்டு மாதத்துக்கு அதிகம் எத்தனை நாளுக்கு என்றாலும் வாங்கின முதலுக்கு அரைவாசி அல்லாமல் அதிகம் வாங்கி நடப்பில்லை.

நகைகள், வீடுகள், தோட்டங்கள், நிலங்கள் அடைமானம் பண்ணிவட்டிக்குத் தடையம் வாங்கியிருந்தால் அதிகம் எத்தனை நாட் சென்று போனாலும் வாங்கின முதலுக்கும் வட்டி அரைவாசிக்கும் மேற்படி அடைமானங்களை விற்றுச் சம்மதி பண்ணுவிக்கிறது. அரைவாசி முதலும் போக, அதிகம் இருந்தால் அடைமானம் பண்ணினவன் எடுத்துக் கொள்ளுகிறது. முதலுக்கும் வட்டிக்கும் காணாமல் இருந்தால் அடைமானம் வாங்கினவன் விற்கிறைமானத் தடையத்தை வாங்கிக்கொள்ள வேணும். அல்லாமற் குறைபிடியானது அடகு வைத்தவனிடத்திற் கேட்கிறதில்லை. வட்டிக்கு வைக்கிறபோதுதான் வைக்கிற ஆதனம் அறவாகும். வட்டிக்கும் காணாதுபோனால் நானே உத்தரிப்பேன் என்று எழுதிக் கொடுத்திருந்தாற் குறைபிடியான முதல் அடகு வைத்தவன் உத்தரிக்கவேணும். வட்டிக்கு அடகு வாங்(கு)கிற பேர் வட்டிக்கும் முதலுக்கும் காணும்படியாகத்தான் அடகு வாங்கி வைக்காததினாலே குறைபிடியானது இழந்து போகிறது.

### வியாபாரங்கள் பண்ணுகிற முறைமை

இவ்விடத்தில் ஒத்த (இ)லாபத்துக்கு முதல் கொடுத்தாற் சரக்குக் கொள் விலை, தீர்வைச் செலவுகள் நீக்கி கண்ட (இ)லாபத்தில் முதல் கொடுத்தவர்கள் பாதியும் முதல் வாங்கிக் கொண்டு போறவனுக்குப் பாதியுமாகப் பகிர்ந்து கொள்ளுகிறது. இதில் வரப்பட்ட சேதங்கள் யாவதும் முதல் கொடுத் தவனுக்குப் பாதியும் முதல் வாங்கினவன் பாதியுமாக உத்தரிக்க வேணும். சூது பவுசுக்குத் தடையம் வாங்கினாற் கொள்விலைச் செலவுகள் நீக்கிக் கண்ட (இ)லாபத்தில் இரு பங்கு தடையம் கொடுத்த முதலாளிக்கும் ஒரு பங்கு காரியகாரரும் எடுத்துக்கொள்ளுகிறது. இதில் வரப்பட்ட சேதங்கள் யாவதும் முதலாளி பிறமேயல்லாது காரியக்காரரைக் தொட்டு ஆக்கினையில்லை.

பத்துக்கொன்று (இ)லாபத்துக்குத் தடையம் கொடுத்தால் பத்துக்கொன்று (இ)லாபம் மாத்திரம் முதல் கொடுக்கிறவர்களுக்கு அல்லாமல் அதிக (இ)லாபம் கண்டதெல்லாம் முதல் வாங்கிக்கொண்டு போறவனுக்கு இந்த வியாபாரத்திற் கடல் யோக்கியமானாலும் நிலுவைகளானாலும் முதல் வாங்கிக் கொண்டு போறவன் பொறுப்பாளியாய் இராது முதல் காரனுக்கு உள்ள முதலும் ஆதாயமும் சம்மதி பண்ணுவிக்க வேணும்.

சிந்தாத்திரை ஒருதலை வட்டத்துக்கு முதல் வாங்கினாற் பத்துக்கொன்று ஆதாயம் கூட்டிச் சரக்கிறக்கி விற்குந் துறையிற் சரக்கிறக்கின 21 நாள் முதல் சம்மதி பண்ணுகிறது. 21 நாளைக்கு அதிகம் சென்றால் வட்டி ஒத்துக் கொள்ளுகிறது. கடலின் பேரில் வரப்பட்ட இராசிகம் தெய்வீகம் முதல் கொடுத்தவர்கள் பெற முதல் வாங்கினவனைத் தொட்டு ஆக்களாயில்லை.

சித்தாத்திரை இரு தலை வட்டத்துக்கு முதல் வாங்கினால் வாங்கின துறையில் நின்று இவன் வாங்கின யாபரங்களை விற்கும் துறையில் விற்று மறு யாபரங்கள் அவ்விடத்தில் வாங்கி ஏற்றிக்கொண்டு இறக்கும் துறைமுகங்களிற் கொண்டு வந்து இறக்கின 21 நாள் முதலும் 10(க்கு) இரண்டு ஆதாயமும் பண்ணி விற்கிறது. இதற்கதிகம் நாள் சென்றாலும் கடல்யோய்க்கியங்களானாலும் மேலே எழுதிய பிரகாரம் நடந்து கொள்ளுகிறது.

இத்தியாதி ஞாபகங்கள் எல்லாம் ஆண்டவனவர்கள் கட்டளை இட்டருளிய உத்தாலுப் பிரகாரம் எழுதி அறியப் பண்ணிக் கொண்டேன்.

(முற்றும்)

## கல்வி அபிவிருத்தி தொடர்பில் அதிபர்களுடன் முக்கிய சந்திப்பு

### வலய ரீதியில் தனித்தனியே இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலைகளின் கட்டுமானங்கள் குறித்து ஆராயும் வகையிலான பாடசாலை அதிபர்களுடனான முக்கிய சந்திப்புக்கள் வலய ரீதியில் தனித் தனியாக நடாத்தப்படவுள்ளன.

இதற்கமைவாக, தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான சந்திப்பு நாளை திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான சந்திப்பு நாளை திங்கட்கிழமை பி.ப. 2.00மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

அத்துடன், வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் 27ஆம்திகதி பி.ப.2.00 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலகத்திலும், தீவகக்கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் 28ஆம்திகதி புதன் கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீவக வலயக் கல்வி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்புக்களில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(உ-37)

## சிறுபான்மைக் கட்சிகளுடன் ஹெல உறுமய இணைவு?

### அஷ்ரப் காங்கிரஸ் அறிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆகிய மூன்று கட்சிகளினதும் அணியில் ஜாதிகஹெல உறுமய சேர்ந்து விட்டதா? என நாட்டின் சகல பகுதிகளிலும் வினா எழுப்பப்படுகின்றது.

இவ்வாறு அஷ்ரப் காங்கிரஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் குறிபபிடப்பட்டிருப்பதாவது,

13வது பாராளுமன்றத்திற்கு சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் மீண்டும் மீண்டும் 3 தடவைகள் வாக்களிப்பு நடைபெற்றமை இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில முன்னொரு போதும் இடம்பெறாத சம்பவமாகும்.

நாட்டின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதில் பெரும்பான்மையான மக்கள் தெரிவித்த அபிலாஷைகளை பிரதிப்லிப்பதும், பேணிப் பாதுகாப்பதுமே ஹெல உறுமயக் கட்சியில உள்ள பிக்குமாரின் உன்னத பணியாக் இருக்கவேண்டும்.

(தி-63)

## பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் மீண்டும் இணைவு

(திருகோணமலை)

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திய 9வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட 38 சிறார்கள் மீண்டும் பாடசாலைக் கல்வியை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யுனிசெவ் அமைப்பும் மூதூர் கல்வி வலயமும் இணைந்து இவர்களுக்கான பாடசாலைக் கல்வி வசதிகளை ஏற்படுததிக் கொடுத்துள்ளது.

இம்மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், சீருடைகள என்பனவற்றை யுனிசெவ் நிறுவனம் நேற்று முன்தினம் வழங்கியது.

(தி-63)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சியக் குழுவின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் வெளிவாரிப் பட்டதாரிகள் பிரிவில் 'பொதுத்தேர்தல்-2004 உம் அதன் கற்பிதங்களும்' என்ற தலைப்பில் கருத்துரை இடம்பெறவுள்ளது.

(உ-18)

அன்பு மாணவர்களே!
உங்கள் வலம்புரியில்
மிக விரைவில் எதிர்பாருங்கள்
சுந்தரின்
5-ம் தர புலமைப் பரீட்சை மாதிரி
வினாத்தாள்கள்.
மு. குறிப்பு: 5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ,
நிர்வாக

# பா.ஜ.கவுக்கு ஆதரவுதர முஸ்லிம்களுக்கு

# துணைப்பிரதமர் அத்வானி அழைப்பு

(புனே)

காங்கிரஸ் கட்சியை முஸ்லிம் கள் அதிகம் நம்பக்கூடாது என்று குறிப்பிட்ட துணைப் பிரதமர் அத் வானி அவர்களைத் திறந்த மனது டன பா.ஜ.க.வுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.


பாகிஸ்தானுடனான மோதல் களுக்கு முற்றுப்புள்ளி வைக்க தேசிய ஜனநாயகக் கூட்டணி அர சால் தான் முடியும் என்றும் அவர் கூறினார்.

புனேயில் நேற்று முன்தினம் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசு கையில், பாகிஸ்தானுடனான உறவை மேம்படுத்தப். பிரதமர் வாஜ்பாய் உளப்பூர்வமான முயற் சிகளை மேற்கொண்டுவருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா வளரும் நாடாக உரு வாக வேண்டும் மென்பதே பா.ஜ.க.தலைவர்களின் கனவா கும்; அந்தக் கனவு நிறைவேறும் வகையில் நாடுதற்போது முன்னே றிவருவதாக அத்வானி கூறினார்.

2020ஆம் ஆண்டு வாக்கில் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர், சாலைகள்,மின்சாரம், பள் ளிகள்,மருத்துவ மனைகள் ஆகிய அடிப்படை வசதிகள் செய்து தரப் படுமென்று அவர் தெரிவிததார்.

காஷ்மீரிலும் நாகாலாந்திலும்



தேர்தல்களை நடத்தியதன் மூலம் நமது கூட்டாட்சித் தத்துவமும் ஜன நாயகமும் வலுப்பட்டிருப்பதாகவும் துணைப்பிரதமர் கூறினார். (து)

## இந்தியச் செய்திகள்

# இலவச காலணி ஊழல் வழக்கில் இந்திரகுமாரி விடுதலை

(தமிழகம்)

முந்திய அ.இ.அ.தி.மு.க ஆட்சி யின் போது இலவசக் காலணி கள் வழங்கியதில் முறைகேடு கள் நடந்ததாகக் கூறித் தொடரப் பட்ட வழககில் முன்னாள் அமைச் சர்கள் இந்திர குமாரி, ஈஸ்வர மூர்த்தி ஆகியோர் விடுதலை செய்யப்பட் டனர்.

இலவச காலணி வழங்கு வதில் 1 கோடியே 20இலட்சம் ரூபா அளவுக்கு முறைகேடுகள் நடந்த தாகக் கூறப்படும் இந்த வழக்கில் 21பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இவர்களில் 2பேர் மரணமடைந்து விட்டனர்.

இருமுறை தீர்ப்பு ஒத்தி வைக் கப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் நீதிபதி மதி வானனால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர்கள் உட் பட 19பேரையும் விடுதலை செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

அவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை அரசு தரப்பு நிரூபிக் கத் தவறிவிட்டதாக நீதிபதி தமது தீர்ப்பில் கூறியிருக்கிறார். (து)

# முல்லை வேந்தன் கார்மீது தாக்குதல்

(சென்னை)

முன்னாள் அமைச்சர் முல்லை வேந்தனின் கார் தாக்கப்பட்டது குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முல்லை வேந்தனின் கார் டிரைவர் கே.பாலு தாக்கல் செய்துள்ள மனு வில்,

இம்மாதம் 10ஆம் திகதி தர்ம புரியில் தி.மு.க.தலைவர் கருணா நிதியின் தேர்தல் பிரசாரக் கூட்டத் துக்காக மேடை அமைக்கும் பணி யைப் பார்வையிட முல்லை வேந் தன் காரில் சென்றார். அப்போது அங்கு அ.தி.மு.கவினர் பிரசாரங் களை எழுதிக் கொண்டும் கொடி களைக் கட்டிக்கொண்டும் இருந்த னர்.

அங்கு இருதரப்புக்கும் இடையே சலசலப்பு ஏற்பட்டது.அந்த நேரத் தில் அங்கு வந்த அமைச்சர் கே.பி. அன்பழகன் தி.மு.கவினரை அடித்து நொருக்குமாறு அவரது கட்சியி னரிடம் கூச்சலிட்டார். அங்கிருந்த வர்கள் முல்லை வேந்தனின் கார் மீது கல்வீசினர்.இதில் கார் கண் ணாடி நொருங்கியது.

மாவட்ட ஆட்சித் தலைவர், பொலிஸ் அதிகாரி மற்றும் அதி காரிகள் முன்னிலையிலேயே இச்சம்பவம் நடந்தது.இதுபற்றி தர்மபுரி நகரப் பொலிஸில் புகார் செய்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்துக்கு அனுப் பப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இப்புகார் பற்றி விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இம்மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி அசோக்குமார் தர்ம புரி பொலிஸாருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். (து)

# கருத்துக் கணிப்புகளை தடைசெய்ய உச்சநீதி மன்றத்தில் பொதுநல மனு


(சென்னை)

மக்களவைத் தேர்தலுக்கான இறுதிக் கட்ட வாக்குப்பதிவு முடி வடையும் வரை வாக்குப் பதிவின் போது நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்களின் முடிவுகளை வெளி யிடத் தடை விதிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை வரும் திங்கட் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிபதிகள் ஆர்.சி. லகோடி,அசோக்பான் ஆகியோர் கொண்ட டிவிஷன் பெஞ்ச் தெரி வித்தது.

வாக்குப் பதிவின் போது நடத் தப்படும் கருத்துக் கணிப்புக்களை வெளியிடுவதற்கு வழிகாட்டல் நெறி முறைகளை வகுக்கத் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடு மாறும் மனுவில் கோரப்பட்டுள் ளது.

தேர்தலுக்கு முந்திய, பிந்திய கருத்துக்கணிப்புக்கள் மக்கள் பரதிநிதித்துவச் சட்டத்தின் 126 ஆவது பிரிவுக்கு முரணாக உள் ளது என்றும் இது வாக்காளர்க ளின் மனதில் தாக்கத்தை ஏற்ப டுத்துவதுடன்,சுதந்திரமாக வாக் களிப்பதையும் பாதிப்பதாக மனு வில் கூறப்பட்டுள்ளது. (து)



இரண்டாம் கட்டவாக்குப்பதிவு நேற்று திரிபுரா மாநிலத்தில் நடைபெற்றது. மேற்கு திரிபுரா மாநிலத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒரு வாக்குச்சாவடியில் வாக்களிக்க வந்திருந்த வயதான மூதாட்டி ஒருவர்.

# அ.தி.மு.க.வெற்றிக்காக விரல்களை துண்டித்த காவலர் மீது விசாரணை

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் அ.தி. மு.க. வெற்றிக்காக மூன்று விரல் களைத் துண்டித்துக் கொண்ட தலைமைக் காவலர் குறித்து விசாரிக்குமாறு தமிழக அரசுக்குத் தேர்தல் ஆணையம் உத்தரவிட் டுள்ளது.

இது தொடர்பாக தமிழக தலை மைத் தேர்தல் அதிகாரி மிருத் யுஞ்சய் சாரங்கி செய்தியாளர் களிடம் பின்வருமாறு தெரிவித் தார்:

சேலம் மாவட்டம் உடையாப் பட்டி காரிப்பட்டி காவல் நிலையத் தலைமைக் காவலர் ரத்தினம் அ.திமு.க. வெற்றிக்காக கடந்த மார்ச் 10ஆம் திகதி தனது மூன்று விரல்களைத் துண்டித்துக் கொண் டார்.அரசுப் பணியில் உள்ள காவ லா ஒருவர்,இவ்வாறு விரல்களைத துண்டித்துக் கொண்டதால் அவர் மீது தேர்தல் ஆணையம் நட வடிக்கை எடுக்குமா எனக் கேட்கி றீர்கள்,இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்குமாறு உள்துறைச் செயலர் முனீர்ஹோதாவிடம் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

பெரியகுளம் தொகுதி அ.தி. மு.க. வேட்பாளர் டி.டி.வி. தினகர னின் சிங்கப்பூர் குடியுரிமை தொடர் பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்து விரிவான அறிக்கை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. விசாரணை குறித்து தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கை அனுப்பப்படும். (து)



தமிழகத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலை யொட்டி, வட சென்னைத் தொகுதி தேர்தல் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர்கள், வடசென்னை தொகுதியில் வாக்குகள் எண்ணப்படும் பிரசிடென் சி கல்லூரி வளாகத்தைப் பார்வையிட்டனர்

# சத்துணவுத் திட்டத்தை சிறப்பாக நடத்துமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு

மாநில அரசுகள் சத்துணவுத் திட்டத்தை வரும் செப்ரம்பர் முதல திகதிக்குள் சிறப்பாகச் செயற்ப டுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் மென்று உச்ச நீதிமன்றம் உத்தர விட்டது.

நீதிபதிகள் வை.கே. சபர்வால், ஜே.சி.எஸ். அகர்லால் ஆகியோ ரைக் கொண்ட உச்சநீதிமன்றப் பிரிவு இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

செப்ரம்பர் முதலாம் ஆம் திக திக்குள் இதற்கான நடவடிக்கை எடுக்கத் தவறினால் சம்பந்தப் பட்ட மாநில அரசுகளின் தலை மைச் செயலாளர்கள், பொறுப் பாளர்கள் என்றும் அவர்கள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கி றார்கள்.

இந்தத்திட்டத்திற்கான உணவு தானிய ஒதுக்கீட்டை இரட்டிப் பாக்க வேண்டும் மென்று மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தர விட் டனர்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பள்ளி மாண வர் களுக்கு கோடை விடுமுறை யிலும் சத்துணவு அளிக்க வேண் டும் மென்று உச்ச நீதிமன்றம் பணித் துள்ளது.

பொதுநலஅடிப்படையில் தொட ரப்பட்ட வழக்கில் இவ்வாறு உச்ச நீதிமன்றம உத்தரவிட்டுள்ளது. (து)

# நாடு பின்னடைந்ததற்கான காரணம் பற்றி சோனியா

தேசிய ஜனநாயகக் கூட்டணி அர சும் தெலுங்கு தேசஅரசும் அனைத் துத் துறைகளிலும் தோல்விய டைந்து விட்டதாக காங்கிரஸ் கட் சித் தலைவர் சோனியா காந்தி கூறி யிருக்கிறார்.

ஆந்திர மாநில குண்டூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர் ஷெடூல் இன மக்கள் சிறுபானமை யினர் உட்பட்ட அனைத்துத் தரப்பு மக்களும் இது குறித்து வேதனை யடைந்திருப்பதாக குறிப்பிட்டார். மத்திய மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கை காரணமாக நாடு பின்னடைந்துளளதாக சோனி யாகாந்தி குறை கூறினார்.

விலைவாசி உயர்ந்துள்ளதென் றும் மக்களின் வறுமை அதிகரித் துள்ளதென்றும் வேலை கிடைக் காததால் இளைஞர்கள் அதி ருப்தியடைந்துள்ளனர் என்றும் காங்கிரஸ் தலைவர் குறிப்பிட் டார். (து)

# சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனைபெற்ற முன்னாள் அமைச்சர் விடுதலை

(வேலூர்)

சொத்துக்குவிப்பு வழக்கில் 3ஆண்டுகள் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் இருந்த முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் கே.பொன்னுசாமி கடந்த புதன் கிழமை விடுதலையானார்.

திருச்சியைச் சேர்ந்த பொன்னு சாமி,மருங்கபுரி தொகுதியில் போட் டியிட்டு சட்டப்பேரவை உறுப் பின ரானார்.

1991முதல்1996வரை நடந்த அ.திமு.க. ஆட்சியில் அவர், துணை சபாநாயகராக சிறிதுகாலமும் பின்னர் கல்வி அமைச்சராகவும் பதவி வகித்தார்.

18.5.1993முதல் 9.5.1996 வரை யில் கல்வி அமைச்சர் பொறுப்பில் இருந்தபோது வருமானத்திற்கு அதிகமாக ரூபா77 இலட்சத்து 50ஆயிரம் சொத்து சேர்த்ததாக தி.மு.க. ஆட்சியில் வழக்குத் தொட ரப்பட்டது.

20.8.96இல் பொன்னுசாமி, அவ ரது மனைவி டாக்டர் பிரபாவதி, மகள் மாலா மற்றும் உறவினர் கள் வெங்கடேசன், ஜெயராமன், ராஜப்பா ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது.இவ்வழக்கில் 9.7.98ல் குற்றப் பத்திரிக்கை தாக் கல் செய்யப்பட்டது.25.1.1999இல் சாட்சிகள் விசாரணை தொடங்கி அரசு தரப்பில் 65 பேர் விசாரிக்கப் பட்டனர். 11.8.2000தில் இவ் வழக் கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.அதில் பொன்னுசாமிக்கு 3ஆண்டு சிறைத் தண்டனையும் ரூபா 1இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

பிரபாவதி,மாலா, வெங்கடேசன், ராஜப்பாஆகியோருக்குத் தலாஓர் ஆண்டு சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது.தனிநீதிமன்ற நீதிபதி ராதாகிருஷணன் அளித்த இத் தீர் ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத் தில் பொன்னுசாமி உள்ளிட்ட 5 பேரும் மேல் முறையீடு செய்தனர். இதில் பொன்னுசாமியின் தண் டனையை உயர்நீதி மன்றம் 12.4. 2001இல் உறுதி செய்தது. மற்ற நால்வரும் விடுவிக்கப்பட்டனர். (து)

பிரித்தலும் பேணிகொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு -குறள்

வலம்புரி

## ஜனாதிபதியின் அழைப்பு வரவேற்கத்தக்கது!

ஐக்கிய தேசியமுன்னணி அரசிற்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று, தடைப்பட்டு போயுள்ள சமாதானப் பேச்சை மீண்டும் தொடர்வதற்கு அனுசரணையாளராகச் செயற்படும்படி நோர்வே அரசிற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்ததை அடுத்து ஜனாதிபதி, நோர்வேக்கு விடுத்த அழைப்பு மீண்டும் யுத்தம் வெடிக்குமோ என ஏங்கியிருந்த மக்களுக்கு சற்று ஆறுதலை தருவதாக உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் அரசில் முக்கியமான அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பறிமுதல் செய்ததை அடுத்து, சமாதான முயற்சியிலிருந்து நோர்வே அரசு தற்காலிகமாக விலகியிருந்தது. இலங்கைத் திருநாடு யுத்தத்தால் அழிந்து போவதை விரும்பாத நோர்வே எதுவித தன்னலமும் இன்றி, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு நோக்கோடு அரசிற்கும் - புலிகளுக்கும் இடையில் சமாதான ஏற்பாட்டாளராக இருந்து செயற்பட்டது.

இவ்வாறு நல்ல நோக்கோடு செயற்பட்ட நோர்வேக்கு இலங்கையில் உள்ள பேரினவாத சக்திகளும், பௌத்த பிக்குகளும் கொடுத்த பரிசு மனிதநேயம் கொண்ட மக்களுக்கு அருவருப்பைத் தந்தது.

சமாதான முயற்சியில் நோர்வே ஈடுபட்டதன் காரணமாக, நோர்வே நாட்டுத் தேசியக் கொடியை பௌத்த பிக்குகளும், பேரினவாத சக்திகளும் தீயிட்டு எரித்தனர்.

இலங்கை நாடு யுத்தத்தால் எரிந்து போவதை தடுக்க வந்த நோர்வேயின் தேசியக் கொடி எரிக்கப்பட்டது. இருந்தும் நோர்வே நாடு தனது உயர்ந்த பணியை - மக்களின் உயிரைப் பாதுகாக்கும் பெரும் தியாகத்தை தொடர அர்ப்பணிப்போடு செயலாற்றியது.

இத்தகையதோர் சூழ்நிலையில் சமாதானத்தை விரும்பாத இலங்கை கடற்படை, கப்பல்கள் மூலம் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதாகவும், இதற்கு நோர்வேயின் கண்காணிப்புக்குழு உடந்தையாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டி அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்தது.

கடற்படையின் அறிக்கை கிடைத்த கையோடு அறிக்கையில் இருக்கக்கூடியதான நம்பகத் தன்மைபற்றி எதுவும் ஆராயாமல் விடுதலைப் புலிகளுக்கு நோர்வேயின் கண்காணிப்புக் குழுத் தலைவர் உதவி செய்வதாகவும், இஃது இலங்கையின் பாதுகாப்பிற்கும், இறைமைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டு கண்காணிப்புக்குழு தலைவரை உடனடியாக திருப்பி அழைக்குமாறு நோர்வே பிரதமருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவசர செய்தியை அனுப்பியிருந்தார். ஜனாதிபதியின் அறிவிப்பை அடுத்து கண்காணிப்புக் குழுத் தலைவர் நோர்வேக்கு அழைக்கப்பட்டார். ஜனாதிபதியின் இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளை நசுக்கிவிடுமோ என ஏங்கிய வேளையில் மீண்டும் சமாதான அனுசரணையாளராக செயற்படும் படியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேக்கு அழைப்பு விடுத்திருப்பது ஓர் திருப்பு முனை என்றே கூறவேண்டும்.

அதேவேளை நோர்வே மீது கூறப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களும் பொய்யானவை என்பதையும் ஜனாதிபதியின் அழைப்பு நிரூபித்துள்ளது. இலங்கையின் சமாதான முயற்சியில் ஈடுபட்டதனால் தனது நாட்டின் நற்பெயருக்கு ஏற்படக்கூடியதான பாதிப்புக்களையும் பொறுத்துக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பை நோர்வே பிரதமர் ஏற்றுள்ளார் எனில அஃது அந்நாட்டின் உயரிய பண்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

எனவே விடுதலைப்புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சை தொடர்வதற்காக நோர்வே அரசை அழைக்கும் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் ஒரு தடவை நோர்வே அரசிற்கும் அந்நாட்டு மக்களுக்கும் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தாதவாறு கண்ணியத்துடன் நடந்து கொண்டு இலங்கை நாட்டின் பண்பாடும் உயர்வுடையது என்பதை நிரூபிக்க வேண்டும்.

# ஹெல உறுமய எம்.பியின் அறநிலையத்தில் காடையர்கள் புகுந்து பெரும் அட்டகாசம்

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் வாசம் செய்து வரும் எம்பிலிப்பிட்டிய ஹிங்குருகார போதிரக அறநிலையத்தினுள் நேற்றுக் காலை நுழைந்த காடையர்கள் சிலர் அங்கிருநத வணக்கத்திற்குரிய பொருடகளை அடித்து நொருககியதுடன், தேரரையும் மிரட்டி உள்ளனர்.

அறநிலையத்தினுள் நுழைந்த காடையர்கள் அனைவரும முகமூடி அணிந்து கூரிய ஆயுதங்கள் சகிதம் சென்றதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

அறநிலையத்தினுள் புகுந்த இவர்கள் அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தி விட்டு அங்கு கறுப்புக் கொடிகளைப்பறக்கவிட்டுச் சென்றுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸாரை காடையர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தியுள்ளனர்.

இக்காடையர்கள் குழுவில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக சோபிததேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அற நிலையத்தைச் சேர்ந்த ஏனைய தேரர்கள் எம்பிலிப்பட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக் கைகளின் போது சந்தேகத்தின் பேரில் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர், அத்துடன் காடையர்கள் வந்ததாகக் கருதப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இச்சம்பவத்தை அடுத்து அற நிலையத்திற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (தி-63)

# ஜாதிகஹெல உறுமயவை மக்கள் விரைவில் நிராகரிப்பர்

## மக்கள் கலைஞர்கள் கருத்து

(கொழும்பு)

13வது பாராளுமன்றத்தின்சபாநாயகர் தெரிவின் போது ஜாதிகஹெலஉறுமய நடந்து கொண்ட முறைக்கு மக்கள் கலைஞர்கள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக வாககளித்ததன் மூலம் நாட்டின் முற்போக்கு சக்திகளின் அபிலாஷைகளுக்கு ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுபபினர்கள் அழிவைத் தேடித்தந்துள்ளனர்.

ஜாதிகஹெலஉறுமைய உறுப்பினர்களின்இந்த நடவடிக்கை மூலம் தனியான ஈழம் உருவாகுவதற்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது. இது ஒருசந்தர்ப்பவாதக கட்சி . விரைவில் இந்தக் கட்சிமக்களால் நிராகரிக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-121)

## அமைச்சர் அதாவுல்லா பொறுப்புக்களை ஏற்றார்

(கொழும்பு)

கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல.எம். அதாவுல்லா கடந்த வியாழனன்று தனது அமைச்சில், அமைசசுப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றார்.

அமைச்சுப் பொறுப்பை ஏற்றதும் அங்கு உரையாற்றிய அதாவுலலா, அத்தியாவசிய, தொழில் ரீதியான அனைத்துப் பணிகளையும் தனது அமைச்சு மூலமாக செய்ய இருப்பதாகவும், ஒலுவில் துறைமுகத்துடன், மீன் பிடித்துறைமுகங்களுக்கும் மக்களுக்குமான அத்தியாவசிய வசதிகளையும் துரிதமான முறையில் திட்டமிட்டு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.இந்த நிகழ்வின் போது பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் பிரசன்னமாக இருந்தார்கள் (உ-121)

## தேரர்கள் கடத்தப்பட்டமை குறித்து விசாரணை நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயக் கட்சியைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களை சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பில் கலந்துகொள்ளவிடாது கடத்திச் சென்று தடுத்து வைத்தோரை உடனடியாக இனங்கண்டு விசாரணை நடத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளார்.

பாராளுமன்றில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பில் கலந்துகொள்ளவந்த தமது கட்சியின் வேட்பாளர்களை யார் கடத்திச் சென்றார்கள்? எதற்காக கடத்திச் சென்றார்கள்? என்பதை அறிவதற்காகவே உடனடி விசாரணையொன்றை நடத்துமாறு தாம் கேட்டுள்ளதாகவும் அவர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடத்தப்பட்டமைக்கும் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-64,10)

### தினசரி தியானம்

ௐ விவேகச் சிந்தனைகள்

உயிர் இவ்வுலகை விட்டுப் போகும் தருணத்தில் கடைசியாக எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்குமோ அதற்குரிய உடலில் மறுபடியும் வந்து பிறக்கின்றது. ஆதலால் பக்தி சாதனை மிகவும் அவசியமாகும்.

சுவாமி விவேகானந்தர்

## ஜாதிகஹெல உறுமய மீது விமல் வீரவன்ச பாய்ச்சல்

(கொழும்பு)

நாட்டைத் துண்டாட ஆதரவு வழங்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையுடன் ஈழ இராஜ்ஜியத்தைப் பிரகடனப்படுத்த முனையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மலையகம் , மற்றும் கிழக்கிலங்கையை சிறுசிறு அலகுகளாகத் துண்டுபோடமுனைபவர்களுக்கும் ஜாதிக ஹெல உறுமய தனது 6 இலட்சத்துக்கும் அதிக வாக்குகளை தாரை வார்த்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச இதுபற்றி மேலும் விபரிக்கையில்,

தர்மராஜ்ஜியம் அமைக்கமுனைந்த பிக்குகள் பேரியல் ராஜ்ஜியத்துக்கு துணைபோகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள்,இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றை விமல் வீரவன்ச கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளமையானது இந்த அமைப்புக்களுடனான குறைந்தபட்ச உறவுகளைக் கூடப்பாதிக்கும் என அரசியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேனவும் ஜாதிகஹெல உறுமயவின் மீது தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

ஹெல உறுமய தமக்களித்த வாக்குறுதிகளை மீறியதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நிலையில்,விடுதலைப்புலிகளுடன் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி அறிவிக்க மறுபுறம் ஐ.ம.சு.முன்னணி முக்கியஸதர்கள் விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய பிரதான கட்சிகளுக்கும் எதிரான வசை பாடல்களை மேற்கொண்டால் சமாதான முயற்சிகள் எவ்வகையில் சாத்தியமாகும் எனப்பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர். (உ-121)

## 30 இலங்கையர்கள் தம்மை விடுதலைசெய்யக் கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

இத்தாலிய அரசாங்கத்தால் திருப்பி அனுப்பப்பட்டு, இலங்கை அரசாங்கத்தினால் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுளள 30 இலங்கை யர்கள் தம்மை சிறையில் இருந்து விடுதலை செயயக் கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு வொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இம் மனுவில் சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசனும் ,குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவின் கட்டுநாயக்க விமான நிலையக கிளைக்குப் பொறுப்பான அதிகாரியும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 23 திகதி இத்தாலியில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளான இவர்களை, கட்டுநாயக்க சி.ஐ.டியினர் கைது செய்து தடுத் துவைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-63)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்

MANOJ EXPRESS SERVICE

MANOJ EXPRESS
The Finest Express Service in the Field

இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.:
021 222 3916
0777 801038

கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி,
காரைநகர் T.P : 0602212472
(சி-7311)

# ஐம்பது தம்பதியினருக்கு வவுனியாவில் பதிவுத்திருமணம்

(கொழும்பு)

தமிழகம் அகதிமுகாமில் தங்கியிருந்த காலத்தில் திருமணம் புரிந்த 50 தம்பதியினருக்கு நேற்று வவுனியாவில் பதிவுத்திருமணம் செய்து வைக்கப்பட்டது. வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய வவுனியா கிளை ஏற்பாட்டில் இவர்களுக்கான பதிவுத்திருமணம் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்டப் பதிவாளர் திருமதி எஸ். இராசரத்தினம் மேற்படி 50 ஜோடிகளுக்குமான பதிவுத் திருமணத்தை மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் யு.ஏன்.எச்.சி.ஆர். சிரேஷ்ட அதிகாரிகள் வவுனியா மாவட்ட திட்ட பணிப்பாளர் உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். அத்துடன் போர் சூழல் காரணமாக தமிழகம் சென்று அங்கு அகதிமுகாம்களில் தங்கியிருந்த காலகட்டத்தில் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.(தி-63)

## தபால்மூல வாக்களிப்பில் ஐ.ம.சு.மு. வெற்றி

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலமான வாக்களிப்பில் குருநாகல் மாவட்டத்திலும், புத்தளம் மாவட்டத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

பெற்ற வாக்குவிபரம் வருமாறு:-

**புத்தளம் மாவட்டம்**
ஐ.ம.சு.மு. - 2602
ஐ.தே.க. - 1675

**குருநாகல் மாவட்டம்**
ஐ.ம.சு.மு. - 13945
ஐ.தே.க. 6962 (ம)

# 50 ஆயிரம் சிறுவர்களுக்கு உதவ யுனிசெப் செயற்திட்டம் தயாரிப்பு

## ஒரு கோடி 40 இலட்சம் டொலர் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் சிறுவர்களுக்கு உதவுவதற்காக ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் ஒருகோடியே 40 இலட்சம் டொலர் செலவிலான செயற்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் அண்மையில் விடுவிக்கப்பட்ட இளவயதுப் போராளிகளுக்கு இடைத்தங்கல் நிலையங்களை அமைத்தல் மற்றும் சிறுவர்களுக்கான கல்வித் திட்டமிடல்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்த யுனிசெப் முன்வந்துள்ளது.

வடகிழக்கில் உள்ள சகல சிறுவர்களுக்கும் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பது தமது நிலையத்தின் நோக்கம் என்று யுனிசெப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அவ்வாறாயினும் இந்தப் பணிகள் பல சவால்களை எதிர்நோக்குவதாகவும், சிக்கலான பிரச்சினைகளைக் கொண்டதாகவும் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்தமாதம் ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவயதுப் போராளிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ளார்கள் என்று யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் முந்நூறு இளவயதுப் போராளிகளை சம்பிரதாய முறைப்படி விடுவித்திருந்தார்கள் மேலும், 750 போராளிகள் தங்கள் சுயவிருப்பத்தின் பேரில் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-121)

## புலிகளை ஆதரிப்பதில் எந்தத் தப்புமில்லை -வை.கோபாலசாமி

(சென்னை)

தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதற்கு தற்போதுதான உலகில அங்ககாரம் கிடைத்துள்ளது. இதற்குக் காரணம் விடுதலைப் போராட்டந்தான்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தடைவிதித்துள்ள உலகநாடுக்ள் கூட, இலங்கை அரசாங்கத்தை விடுதலைப் புலிகள இயக்கத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. எனவே, விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவதில் எதுவித தவறும் இல்லை என அழுத்திக் கூறியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.(உ-18)

# தேர்தலில் வாக்களிக்கச் சென்ற தொழிலாளர்கள் மீது தாக்குதல்

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கச் சென்ற தோட்டத் தொழிலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகமப்பகுதியிலுள்ள நோட்டிங் கிங் பிட்டதந்த, வட்டலக்க ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாள்ர்கள் மீதே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனினும், இவ்வாறான சம்பவங்கள் குறித்து தமக்கு எவ்விதமான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என மாவத்தகம பொலிஸ பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆனால், வடமேல் மாகாணத்தில் நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் சிறுசிறு தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாக தேர்தலைக் கண்காணித்து வந்த பவ்ரல் அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(தி-63)

THE ROYAL COLLEGE OF JAFFNA

நாமும் நலன் பெற நாடும் பயன்பெற 10 வருடங்களாக சிறந்த மாணவர்களை உருவாக்கி வரும் தனியார் பாடசாலை 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

## அஸ்கிரிய...

கவலையளிப்பனவாக உள்ளன.

இருந்தபோதிலும் சபாநாயகர் தெரிவு ஜனநாயக முறைப்படி இடம்பெற்றுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டியது. இந்நிலையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமான முறையில் இடம் பெறவேண்டும் என தேரர் வலியுறுத்தினார்.

இச்சந்திப்பை முடித்துக் கொண்டரணில் விக்கிரமசிங்க, மல்வத்தபீட அதி சங்கைக்குரிய ரம்புக்வெல ஸ்ரீ விபஸ்சி தேரரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில், சமாதான நடவடிக்கைகள் சுமுகமாக இடம்பெற வழி செய்யப்பட வேண்டும் என்றும், தேரர்களை தேர்தலில் போடடியிட தாம் ஒருபோதும் அனுமதி அளித்ததில்லை என்றும் விபஸி தேரர் அங்கு கூறினார். (த-121)

## விடுதலைப்...

தெரிவித்திருந்தது.

இந்நில்லையில், நோர்வே புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கும் பட்சத்தில் அது தொடர்பாக விடுதலைப் புலிகளின தலைமை தனது நிலைப்பாட்டைத தெரிவிக்கும் என புலிகளின் ஊடகப் பிரிவுப் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் சமர்ப்பித்திருந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்யோசனைகளை அடிப்படையாகக் கொண்டே சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியும் என்ற முன்நிபந்தனையை விடுதலைப் புலிகள் முன்வைக்கலாம் என்றும் வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

## ஜனாதிபதியின்...

ற்கு 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒஸ்லோ பிரகடனத்தையும் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட டோக்கியோப் பிரகடனத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா செயற்படவேண்டும்.

இது விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தனது அறிக்கையில் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேயின் மத்தியஸ்தத்தைக் கோரியிருப்பது இந்தியாவின் தலையீட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் செயலாக அமையும் என இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ள நிலையில், இந்தியாவின் ஆசீர்வாதத்துடனே ஜனாதிபதி நோர்வே அரசின் உதவியை நாடியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ம)

## 'கருமய'...

கோபத்தில் இவ்வாறு வர்ணித்துள்ளனர்.

இங்கு உரையாற்றிய விமல் வீரவன்ச, ஜாதிக ஹெல உறுமயவினை மககள் உதறித்தள்ள வேண்டும். தர்ம இராச்சியத்தை உருவாக்குவதாகக் கூறிக்கொண்டு வந்தவர்கள் தற்போது புலிகளின் பிரதிநிதிகளான தமிழ் கூட்டமைப்புடன் கைகோர்த்துள்ளனர். மேலும் ஹெல உறுமயவினர் பொய்களைக் கூறிவருகின்றனர். ஐ.ம.சு. கூட்டமைப்பு தங்களில் இரு உறுப்பினர்களை கடத்திவிட்டது என்பது அதில் ஒன்று என்றும் வீரவன்ச கூறினார்.

மைத்திரிபால சிறிசேன கூறுகையில்; ஹெல உறுமயவினர் புலிகள் பிரதிநிதிகள் பக்கம் தாம் நிற்க மாட்டோம் என தெரிவித்து விட்டு தற்போது தமது கொள்கையிலிருந்து பின்வாங்கி விட்டனர் என்றார்.(த-6)

## அரசாங்கம்...

கீழ்த்தரமான நடத்தைகளால் எமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யவுள்ளோம். இதனால் எமது தர்மராஜ்ய கொள்கைகளை எவரும் சிதைத்துவிடமுடியாது. விமல் வீரவன்ச தனது முகத்தை மூடிக் கொண்டு பாராளுமன்றில் கூச்சலிட்டதை நாம் கண்டோம் என்றார். (த-6)

விமானப் பயணிகளின் கவனத்திற்கு!

உங்களின் கொழும்பு-யாழ்ப்பாணம் பிரயாணங்களுக்கான எக்ஸ்போ எயர் (EXPO AIR) விமானப் பயணச் சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட எமது நிலையத்தின் ஏனைய சேவைகள்

1. உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகள்
2. இன்ரநெற் (INTERNET) வசதிகள் நிமிடத்திற்கு 8/-
3. பக்ஸ் (FAX)
4. போட்டோ பிரதியாக்கம் (PHOTO COPY)
5. வெஸ்டேன் யூனியன் பணப் பரிமாற்றம் (WESTERN UNION MONEY TRANSFER)

குறிப்பு:- எக்ஸ்போ எயர் விமானப் பயணச் சீட்டுக்களை கைதடி வசந்தா முகவர் தபால் நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே.222 3850

குகன் தொலைத் தொடர்பகம்
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்:– 021 222 2027
021 222 2993
பக்ஸ்:– 021 222 2345

(C/137)



இன்று
பங்குகள் விற்கப்படுகின்றன
(இலங்கை விகடன்)







கம்பனி பதிவு இல.
N (PVS) 37341

யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் மாலை 4.00 மணிக்கு

றிப்போட்டர்ஸ் பப்ளிகேஷன் பிறைவேற் லிமிட்டெட்,
160, தெலங்கபாத்த வீதி, வத்தளை.
தொ.பேசி: 011-4810054
உடனடி தொடர்புகளுக்கு யாழ்.நகரில் 0777-917110

ஒவ்வொன்றும் 10/- பெறுமதியான பங்குகளை நீங்களும் வாங்கலாம்.

பங்குகளை வாங்கி நீங்களும் உரிமையாளராகுங்கள்

(8363)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.